நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

யாழ்.நகரில் தனித்துவமான
கலைநயம் மிக்க துல்லியமான
அச்சுவேலைகளுக்கு
SP சிறந்த இடம்
சுரபி பதிப்பகம்
267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2037 | ஆடி 18 | ஹிஜ்ரி 1427 | றஜபு 08 | (03.08.2006) | வியாழக்கிழமை | இதழ் 306

## அதிகாலை அதிரடியில் படைத்தளங்கள் அழிப்பு

# மூதூர் நகரின் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில்!




திருகோணமலை—

திருகோணமலை - மூதூர் பிரதேசம் மீது நேற்று அதிகாலை பெரும் தாக்குதலைத் தொடுத்த விடுதலைப் புலிகள் - பல படைமுகாம்களைத் தாக்கி அழித்துக்கொண்டு முன்னேறி, மூதூர் நகரின் பெரும்பகுதியை தம்வசப்படுத்தியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

நேற்று அதிகாலை 1.30மணியளவில் விடுதலைப் புலிகளின் படையணிகள் கட்டைபறிச்சான், மகிந்தபுர, பச்சனூர், பாலத்தோப்பு ஆகிய பிரதான படைத்தளங்கள்மீது ஏக காலத்தில் தாக்குதலைத் தொடுத்தன.

ஆயிரத்துக்கும் அதிகமான ஆண், பெண் போராளிகள் கனரக ஆட்லறிகள், 120 மில்லிமீற்றர், 81 மில்லி மீற்றர் மோட்டார்களின் உதவியுடன் கடும் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து 800 மீற்றர் தொலைவிலுள்ள (10 ஆம் பக்கம் பார்க்க)

## 854 படையினருடன் துருப்புக்காவி தத்தளிப்பு

கொழும்பு—

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து புறப்பட்டு திருகோணமலைத் துறைமுகத்தைச் சென்றடைய முடியாததால் சர்வதேசக் கடற்பரப்பில் காத்திருக்கும் கடற்படை துருப்புக்காவிக் கப்பலை பாதுகாப்பாக கொண்டுவந்து சேர்க்க இலங்கை அரசாங்கம் இந்தியாவின் உதவியை நாடியுள்ளது.

854 படையினரை ஏற்றிச்சென்ற இந்தக் கப்பல் திருமலைக் கடற்படைத்தளத்தின் மீதான ஆட்லறித் தாக்குதலின் காரணமாக சர்வதேச கடற்பரப்பை நோக்கிச் சென்றது.

சர்வதேச கடற்பரப்புக்குத் தப்பிச் சென்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

## தற்காப்பு ரீதியிலேயே புலிகள் தாக்குதல்!

### இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்

கிளிநொச்சி—

திருகோணமலையில் படையினர்மீது தற்காப்பு மற்றும் மனிதாபிமான அடிப்படையிலேயே புலிகள் தாக்குதல்களை நடத்திவருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

தமிழ்நெற் இணையத்தளத்துக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அரச படையினரின் வலிந்த படையெடுப்புக்களை நிறுத்துவதற்கு தற்காப்புக்கான தாக்குலைப் போராளிகள் தொடுத்துள்ளனர்.

அத்துடன், அரசாங்கம் தொடுத்துள்ள கண்மூடித்தனமான வான் வெளி, ஆட்லறி ஷெல் தாக்குதல்களிலிருந்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பகுதிகள் மீது உக்கிர வான் தாக்குதல்!


சீறிச் செல்லும் பல்குழல் பீரங்கி ஷெல்கள்

திருகோணமலை—

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள்மீதும், விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட பகுதிகள்மீதும் நேற்று விமானப்படையினருக்குச் சொந்தமான கிபிர் விமானங்கள் உக்கிர வான் தாக்குதலை நடத்தின.

அத்துடன், மங்கிபிறிட்ஜ், கடற்படைத்தளம் ஆகிய இடங்களிலிருந்து பல்குழல் பீரங்கிகள் மூலம் தொடர்ச்சியாகத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (10 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் பகுதி தாக்குதல்களில் படைத்தரப்பில் பெரும் சேதம்


காயமடைந்த கடற்படைச் சிப்பாய்

திருகோணமலை—

திருகோணமலை - மூதூர் பிரதேசத்திலுள்ள இராணுவ, கடற்படைமுகாம்கள், பொலிஸ் நிலைகள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களில் பாரிய சேதங்கள் ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் படையணிகளின் தாக்குதல்களையடுத்து இராணுவ, கடற்படை அணிகளும், பொலிஸாரும் தப்பியோடி ஆங்காங்கே சிறுசிறு குழுக்களாக நிலைகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த மோதல்களில் படையினர் தரப்பில் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டிருப்பதாக (10 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் உள்ள முகாம்கள் தொடர்ந்து படையினர் வசம்!

### என்கிறது படைத்தரப்பு

கொழும்பு—

மூதூரில் பல இராணுவ முகாம்களை புலிகள் தாக்கியழித்து - நகரின் பலபகுதிகளைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்திருப்பதாக வெளியான தகவல்களை - அரச தரப்பு முற்றாக நிராகரித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் கெகலிய ரம்புக்வெல கருத்துத் தெரிவிக்கையில்:-

இராணுவத்தினருக்கு எத்தகைய பின்னடைவும் ஏற்படவில்லை. புலிகள் பொய்யான பிரசாரத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் மூதூரிலுள்ள பொலிஸ் நிலையத்தின் மீதே தாக்குதல் நடத்தினர். அப்போது அங்கே 8 பொலிஸார் மட்டுமே இருந்தனர். அவர்களுக்கு எந்தவித சேதமும் ஏற்படவில்லை.

ஆனால், பொலிஸ் நிலையத்துக்குச் சேதம் ஏற்பட்டபோதும் - தற்போது பொலிஸ் நிலையப் பிரதேசம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது.

விடுதலைப் புலிகள் மூதூர் பகுதியை நோக்கி குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். ஆன ல், (10 ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டைக் கடற்சமர்களில் 3 கடற்படைப் படகுகள் சேதம்!

கிளிநொச்சி—

திருகோணமலை - புல்மோட்டைக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் மாலை முதல் - நேற்று அதிகாலைவரை இரண்டு கட்டங்களாக இடம்பெற்ற கடற்சமர்களில் கடற்படையின் மூன்று டோறா அதிவேகத் தாக்குதல் படகுகள் பலத்த சேதமடைந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

திருமலை உட்துறைமுகத்தினுள் நேற்று முன்தினம் - பிற்பகல் இடம்பெற்ற கடற்சமரையடுத்து - அன்று மாலை 5.30 மணி முதல் - இரவு 7 மணிவரை புல்மோட்டை - கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் கடற்பரப்பில் கடற்புலிகளுக்கும், கடற்படையினருக்கும் இடையே கடும்மோதல் இடம்பெற்றது.

இந்தக் கடற்சமரில் கடற்படையின் இரு டோறா அதிவேக தாக்குதல் படகுகள் பலத்த சேதமடைந்தன.

இதேவேளை, நேற்றுமுன்தினமிரவு 9 மணிமுதல் மீண்டும் புல்மோட்டைக் கடற்பரப்பில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்குமிடையில் ஆரம்பித்த சமர் நேற்று அதிகாலை 3 மணி வரை நீடித்தது.

இதன்போது கடற்படையின் டோறா அதிவேக தாக்குதல் படகு பலத்த சேதமடைந்ததாக புலிகள் அறிவித்தனர்.

இதேவேளை, புல்மோட்டைக் கடற்பரப்பில் கடற்புலிகளின் தொடரணியை - வான்படையின் உதவியுடன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயிரக்கணக்கான படையினர் மூதூரில் புலிகளின் பொறியில்!

திருகோணமலை—

திருகோணமலை - மூதூர் பகுதிக்குள் ஆயிரக்கணக்கான படையினரும் ,பொலிஸாரும் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியிருப்பதாகவும்-

இவர்களை மீட்கவும், முன்னேறியுள்ள புலிகளை பின்வாங்கச் செய்யவும் படைத்தரப்பு மேற்கொண்ட தரையிறக்க முயற்சிகள் வெற்றியளிக்கவில்லையெனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. (10 ஆம் பக்கம் பார்க்க)



நல்லூர் கந்தன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற நான்காம் திருவிழாவில் முருகப்பெருமான் வெளிவீதி வலம்வரும் காட்சி.

# ஆங்கில தினப்போட்டி ஆரம்பம்

திருகோணமலை —

இந்த ஆண்டுக்கான ஆங்கில தினப்போட்டி நிகழ்ச்சிகளின் மாவட்டமட்ட எழுத்துப் போட்டிகள் நாளை வடக்கு-கிழக்கு மாகாணத்தின் ஒன்பது கல்வி மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது என மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான போட்டிகள் வின்சன்ற் மகளிர் கல்லூரியிலும், கல்முனை கல்வி மாவட்டத்துக்கான போட்டிகள் வெஸ்லி உயர்தரப் பாடசாலையிலும், அம்பாறை மாவட்டத்துக்கான போட்டிகள் டி.எஸ்.சேனநாயக்க மாவட்டத்திலும், திருகோணமலை மாவட்டத்துக்கான போட்டிகள் புனித ஜோசெப் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்துக்கான போட்டிகள் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், மன்னார் மாவட்டத்துக்கான போட்டிகள் புனித சேவியர் ஆண்கள் கல்லூரியிலும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கான போட்டிகள் மாங்குளம் மகாவித்தியாலயத்திலும்,

கிளிநொச்சி மாவட் டத்துக்கான போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும், வவுனியா மாவட்டத்துக்கான போட்டிகள் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

மாவட்ட மட்டப் போட்டிகளில் முதலாமிடத்தைப் பெற்ற மாணவர்கள் மாகாண மட்டப் போட்டிகளுக்குச் செல்லத் தகுதி பெறுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலவச சீசன் வழங்கும் கால எல்லை நீடிப்பு!

யாழ்ப்பாணம் —

பாடசாலை மாணவர்களுக்கான இலவச பருவகாலச்சீட்டு வழங்குவதற்கான கால எல்லை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் அதிகாரி செ.கமலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

பாடசாலை மாணவர்களுக்கான ஆறு மாத காலத்துக்கான இலவச பருவகாலச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளது. பருவகாலச்சீட்டு பெற்றுக்கொள்ள நேற்றே இறுதித்தினம் எனத் தெரிவிக்கப்பட்டபோதும், இதுவரை பருவகாலச்சீட்டு பெற்றுக்கொள்ளாத மாணவர்களின் நலன்கருதி இந்த மாதம் 31 ஆம் திகதி வரை நீடித்துள்ளதாகவும் -

இது தொடர்பான அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வழங்குமாறு பாடசாலை அதிபர்களிடம் - அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# புதிய நிர்வாகசபை தெரிவு

பருத்தித்துறை —

தும்பளை தெற்கு சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும் அண்மையில் நடைபெற்றது.

இ.அன்ரனி தலைவராகவும், சி.மார்க்கண்டு உபதலைவராகவும், வ.பாலச்சந்திரன் செயலாளராகவும், க.ஶ்ரீதரன் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். நிர்வாக உறுப்பினர்களாக க.கிருபாகரன் ச.புவனேஸ்வரி செ.மேரி மாக்கிரட் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

தும்பளை கிராமசேவையாளர் ரி.சாருமதி முன்னிலையில் நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது.

# தொழில்நுட்பவியலாளர்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யழ்ப்பாணம் —

யாழ்.மாவட்ட மீள் நிர்மாணமும் அபிவிருத்திக்குமான (12 e cons truction and development agency) நிறுவனத்தின் மாவட்ட பொறியியலாளர் பணிமனைக்கு தொழில்நுட்பவியலாளர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் தொழில்நுட்பக் கல்வித் தராதரத்தை கொண்டிருப்பதோடு-மோட்டார் சைக்கிள் ஓட்டக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் மாவட்டத்தில் நடைபெறும் சுனாமி வீடமைப்பு திட்டத்தின் தரத்தைப் பேணுவதற்கும், வீடமைப்பு சம்பந்தமான முன்னேற்ற அறிக்கைகளை தயாரிப்பதிலும் ஈடுபடுத்தப்படுவார்கள்.

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்ப படிவங்களை, மாவட்ட பொறியியலாளர் பணிமனை - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கலாம் என யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# 3 போராளிகள் வீரச்சாவு

திருகோணமலை —

திருமலை மாவிலாற்றுப் பகுதியை நோக்கி கடந்த திங்கட்கிழமை முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலின்போது 3 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.

சம்பூர் 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மேஜர் புரட்சி என்றழைக்கப்படும் செல்வநாயகம் யோகீதன், கப்டன் மகேந்திரம் என்றழைக்கப்படும் மூதூர் ஈச்சிலம்பற்றைச் சேர்ந்த நவரெட்ணம் மகேந்திரம், வீரவேங்கை அறிஞ்ஞதீபன் என்றழைக்கப்படும் திருகோணமலை நிலாவெளியைச் சேர்ந்த சுரேந்திரராசா வன்னவன் ஆகியோரே வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.



கரவெட்டி பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்காக நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் நீதிவான் நீதிமன்ற பதிவாளர் வி.மார்க்கண்டு ஆகியோரையும் காணலாம்.

# ஆய்வுகூட திறப்பு விழா

யாழ்ப்பாணம் —

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழா நாளை நண்பகல் 12 மணிக்கு பாடசாலை அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக நிக்கோட் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் க.நவரட்ணராசா கலந்து கொள்வார்.


ஆசியுரையை யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம் நிகழ்த்தவுள்ளார். யாழ்.வலய நிறைவேற்று பொறியியலாளர் ஜி.சிவபாலன், கல்லூரி பழையமாணவர் சங்கத் தலைவர் எஸ்.ரி. பத்மநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளனர்.

# ஆவணக் காப்பகம் கரவெட்டியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச செயலக கலாசார பேரவையால் ஆவண காப்பகமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி பிரதேச எழுத்தாளர்கள், கலைஞர்கள் தமது ஆக்கங்களையும், படைப்புக்களையும் இந்த ஆவணக் காப்பகத்துக்கு அனுப்பிவைக்க முடியும். பிரதேசம் சார்ந்த ஆக்கங்கள் இருப்பின் அவற்றையும் ஆவணக் காப்பகத்துக்கு வழங்கி அதன் வளர்ச்சிக்கு உதவுமாறு பிரதேச செயலாளரும், பிரதேச கலாசார பேரவைத் தலைவருமான கே.சத்தியசீலன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



யாழ்.அடைக்கல அன்னை முன்பள்ளியின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது - நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். நகர் மேற்கு கிராம அலுவலர் ஆ.ஞானசேகரம் மங்கள விளக்கேற்றுவதையும் - உதவி பங்குத்தந்தை அருட்திரு எ.செ.கி.மரியதாஸ் அருகில நிற்பதையும், பங்குத்தந்தை அருட்திரு. ம.இ.பயஸ் அடிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# தென்மராட்சி பகுதியில் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை!

தென்மராட்சி —

தென்மராட்சி பிரதேசத்தில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தி வறிய நிலையிலுள்ள விவசாயிகளுக்கு உதவிகளைச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நடவடிக்கையில் 'கெயார்' நிறுவனம் ஈடுபட்டுவருகிறது.

தென்மராட்சியின் பல கிராமசேவகர் பிரிவுகளிலும் பாவிக்கமுடியாத நிலையில் காணப்படுகின்ற கிணறுகளை மீள்நிர்மாணம் செய்து விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

விவசாயிகளை ஊக்கப்படுத்தும் நோக்குடன் - விவசாய பாடசாலை ஊடாக அறிவுரைகளையும், நிதியுதவிகளையும் வழங்கிவருகிறது.

வறுமைக்கோட்டினுள் வாழும் விவசாயிகளின் நீர்ப்பாசனத்தை மேம்படுத்த கிணறுகளை திருத்துமுகமாக - கல்வயல் கிராமசேவகர் பிரிவில் 12 கிணறுகளையும், சந்திரபுரம் கிராமசேவகர் பிரிவில் 16 கிணறுகளையும் தற்கால நீர் தட்டுப்பாட்டை உணர்ந்து உடனடியாக மீள்நிர்மாணம் செய்யும் வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விளைவேலிப்பகுதியில் இவ்வாரம் முதல் கிணற்று வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அந்தப் பகுதி விவசாயப் பாடசாலைக்குழுவின் தலைவர் கா.வரதராசா தெரிவித்தார்.

# வாழ்க்கைப்படிச் செலவு உயர்வு ஓய்வூதியர்களுக்கும் கிடைக்கும்

கொழும்பு —

ஓய்வூதியம் பெறும் அரச ஓய்வூதியர்களுக்கு வாழ்க்கைப்படி செலவு அதிகரிப்பாக ஆயிரத்து நூறு ரூபாவை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்திலிருந்து இந்த வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுப்படிக்கு மேலதிகமாக ஆயிரத்து நூறு ரூபாவை வழங்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
ஜெயம் ரவி, திரிஷா, தேஜாஶ்ரீ, ரிச்சாட் பட்டேல்
சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்
காட்சி நேரம் : 10.30, 2.30 மட்டும்
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

மனோகரா யாழ்ப்பாணம்
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
ஜீவன், சோனியா நடித்த
திருட்டு பயலே
வெகுவிரைவில்
ஜீவா, கோபிகா மற்றும் பலர் நடித்த
அரண்
காட்சி நேரம் 10.30,2.30,6.30.

DAIDO
CF 90C 4 Gear
எங்களிடம் தாராளமாக DAIDO, YAMATO, HONDA, YAMAHA, BAJAJ, SUZUKI மற்றும் எல்லா சீனா தயாரிப்புகளுக்குப் பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டியளவு கிடைக்கும்
Koyo ரேசர்கள்
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO
ஏகமுகவர்
செரண்டிப் மோட்டர் என்டர்பிரைஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
தொலைபேசி : 011-2341550-1, 2435770,
பக்ஸ் 011-2454608
E.mail: zme@slt.lk

கந்தன் அருள் அனைவர்க்கும் கிடைப்பதாக!
அபிஷேக பொருட்களுக்கு எங்கும்
அலையவேண்டியதில்லை. உடன் புறப்படுங்கள்...
சிவசம்பு களஞ்சியம்
அபிஷேக சாமான் பல்பொருள் வாணிபம்
இல.3 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
[5492]


## இரத்மலானையில் பெருமளவு அம்புலன்ஸ்கள்

கொழும்பு

இரத்மலானை விமான நிலையத்தில் பெருமளவு அம்புலன்ஸ் வண்டிகள் நேற்று முன்தினம் இரவு நிறுத்தப்பட்டிருந்ததாகக் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

மோதல்களில் காயமடையும் படையினரை ஏற்றிச் செல்வதற்காகவே இவை தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

சுமார் 50 வரையான அம்புலன்ஸ் வண்டிகள் இவ்வாறு நிறுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



## கண்காணிப்புக்குழுவின் நிலையை அரசு எவ்வாறு கையாளவுள்ளது?

### அவதானிக்கிறதாம் ஜே.வி.பி

கொழும்பு

கண்காணிப்புக்குழு தொடர்பாக எத்தகைய நிலைப்பாட்டை அரசு எடுக்கவுள்ளது என்பது குறித்து அவதானித்துவரும் அதேவேளை, இந்த நாட்டில் கண்காணிப்புக்குழு தங்கியிருப்பதில் அர்த்தம் எதுவுமில்லையென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்ததாவது -

இலங்கையிலிருந்து கண்காணிப்புக்குழு உடனடியாக வெளியேற வேண்டுமென்ற எமது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. ஆனால், அரசாங்கம் ராஜதந்திர நடவடிக்கை எனக் கூறிக்கொண்டிருக்கிறது.

அத்துடன், அரசின் பொருளாதார முகாமைத்துவ செயற்பாடுகளில் எமக்குத் திருப்தியில்லை. மகிந்த சிந்தனையும் திசைமாறிக் கொண்டிருக்கிறது.

இதனை மாற்றியமைக்க வேண்டும். நாட்டில் வேலை நிறுத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. இவற்றைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்தால் இயலவில்லை.

அமைச்சர்களும் அதிகளவில் நியமிக்கப்பட்டுள்ளனர். இவை தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

இனப்பிரச்சினை அதிகாரப்பகிர்வு மூலம் தீர்க்கப்படவேண்டுமென்பது சுதந்திரக்கட்சியின் நிலைப்பாடாகும். மாறாக, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலைப்பாடல்ல என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டுமென அவர் தெரிவித்தார்.

## 73 சிங்கள குடியேற்றவாசிகள் இடப்பெயர்வு

திருகோணமலை

மணலாறு - கொக்குத்தொடுவாய் பகுதியில் அரசாங்கத்தால் ஆயுதப் பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கப்பட்ட எழுபத்து மூன்று சிங்களவர்கள் குடியேற்றங்களை விட்டு தப்பியோடியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை புல்மோட்டை கடலில் இடம்பெற்ற கடற்சமரையடுத்து குறிப்பிட்ட எழுபத்து மூன்று சிங்களக் குடியேற்றவாசிகளும் புல்மோட்டை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இவர்களைப் போன்று திருமலையின் வடமுனையில் படைகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்ற மேலும் ஒரு தொகுதி சிங்களவர்கள், குடியேற்றக் கிராமங்களை விட்டு வெளியேறுவதற்கு தயாராகிவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## எண்ணெய் குதங்கள் பிரச்சினையால் இந்தியாவுடனான உறவு சீர்குலையும்

### ஐ.தே.க. எச்சரிக்கை

திருகோணமலை

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்திய நிறுவனத்திடமிருந்து அரசாங்கம் கையகப்படுத்திக் கொண்டமையால் இந்திய இலங்கை உறவுகள் சீர்குலையும் என ஐ.தே.க எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறியதாவது -

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைய ஆட்சிக் காலத்தில் இந்தியாவுக்கு குத்தகையாக வழங்கப்பட்ட எண்ணெய்க் குதங்களை அரசாங்கம் கையகப்படுத்திக் கொள்ள பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையானது வெளிவிவகார அமைச்சகத்துடனான ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்பட்டதா? இத்தகைய அதிரடி நடவடிக்கைகளால் இந்திய - இலங்கை உறவு சீர்குலைந்துவிடும்.

இலங்கையிலுள்ள லங்கா - இந்தியன் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கான மானியத்தை அரசாங்கம் நிறுத்திவிட்டு எரிபொருள் விலை உயர்வுக்கு அனுமதி அளித்துள்ளது. அரசாங்கத்தின் மீது அந்நிய முதலீட்டாளர்கள் நம்பிக்கையிழந்து விட்டனர்.

தொழிற்சங்கத்தினரது கைதியாக மகிந்த ராஜபக்ஷ செயற்படுகிறார். அதனால் அர்த்தமற்ற செயற்பாடுகளை அவர் மேற்கொள்ள வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

## சிங்கள இன விகிதாசாரத்தை அதிகரிக்க பிரதமர் ஆலோசனை

கொழும்பு

சிங்கள இன விகிதாசாரத்தை அதிகப்படுத்துமாறு சிங்கள குடும்பத் தலைவர்களுக்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அறிவுரை கூறியுள்ளார்.

அழகான சிறிய குடும்பமென்ற வரையறையை உடைத்தெறிந்து கொண்டு செல்லவேண்டிய கட்டாயமொன்று இன்று சிங்கள இனத்துக்கு ஏற்பட்டுள்ளது.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் போன்ற உபதேசங்களுக்கு கட்டுப்பட்டு சிங்கள இனம் தனது வளர்ச்சி வீதத்தைக் குறைத்துக் கொண்டுள்ளது.

ஆனாலும் ஏனைய சமூகங்கள் அதற்கு கட்டுப்படாமல் அத்துமீறி செயற்பட்டு வந்துள்ள விடயம் புள்ளி விபரங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாட்டின் தேசிய தேவை குறித்து சிந்திக்கும் ஒவ்வொரு சிங்களவரும் தமது வாழ்க்கைத் தரத்துக்கு ஏற்ப சிறிய குடும்பம் என்ற கட்டுப்பாட்டை தளர்த்தி பங்காளிகளாக வேண்டும்.

இன்று பௌத்த துறவிகளாவதற்கு சிறுவர்களைத் தேடிக்கொள்வதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



## தொழிலாளர் வர்க்கத்தை ஒடுக்கும் அரசுக்கு ஜே.வி.பி ஆதரவு இல்லை

### லால்காந்த தெரிவிப்பு



கொழும்பு

ஏனையவர்களின் வாக்குகளைப் பெற்று உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் அரசாங்கத்திலிருந்து கொண்டு தொழிலாளர் வர்க்கத்தை அடக்குவதற்காக சட்டம் கொண்டு வர நினைப்பவர்கள் தாங்கள் இருப்பது இந்த பூமியில்தானா என்பதை நன்றாக சிந்தித்துப் பார்க்கவேண்டும் என தேசிய தொழிற்சங்கங்களின் தலைவரும், ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கும் சமாதானமாக பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் தயாராக இல்லாத அமைச்சர்கள் அரசாங்கத்துக்கு எதிரான சதித்திட்டங்களின் கட்டாய பங்குதாரர்களாவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழிலாளர்களுக்கு விரோதமான செயற்பாடுகளுக்கு எதிராக துறைமுகம், பெற்றோலியம், ரயில், மின்சாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பணியாற்றுவதற்கான விரிவான வேலைத் திட்டமொன்றை ஆரம்பித்து வைக்கும் போதே லால்காந்த இவ்வாறு தெரிவித்தார்.

தொழிலாளர் வர்க்கத்தை ஒடுக்குவதற்கு ஏதேனும் ஒரு அரசாங்கம் முயலுமானால் அந்த அரசாங்கத்துக்கு ஜே.வி.பி.யின் ஆதரவு ஒருபோதும் கிடைக்காது.

தொழிற்சங்கங்களை அடக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எவரேனும் கூறுவார்களாயின் அவ்வாறான அடக்குமுறையை ஒரு தடவை நடத்திக் காட்டட்டும். அவ்வாறு நிகழ்ந்தால் இந்த நாட்டில் மீண்டும் ஒரு தேர்தல் நடத்த வேண்டி ஏற்படும்.

ஜே.வி.பி என்ற வகையில் அரசாங்கத்துக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொண்ட உடனே அவ்வாறானதொரு நிலை ஏற்படும்.

அரசாங்கத்தில் இருக்கும் சில சக்திகளுக்கு தொழிற்சங்கங்களை ஒடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு செய்யுமாறு அவர்கள் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

அவ்வாறானதொரு கடுமையான நடவடிக்கை அரசாங்கத்தால் எடுக்கப்படுமானால் அந்த நொடியிலிருந்து அரசாங்கம் ஒன்று இருக்காது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள் பலர் விரும்பவில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையில் அமர்வதே அவர்களின் விருப்பமாக இருந்ததென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### தரம் 1 அனுமதி நேர்முகப் பரீட்சைக்கு

## பெற்றோர், மாணவர்களை அழைத்துச் செல்ல வேண்டும்



கொழும்பு

தரம் 1 மாணவர்களை பாடசாலையில் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்குத் தேவையான ஆவணங்களுடன் குறித்த மாணவரை பெற்றோரே அழைத்துச் செல்ல வேண்டுமென கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

எனினும் மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். அனுமதி கோரும் மாணவரை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே இந்த நடைமுறை கொண்டுவரப்பட்டது.

தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான சுற்றுநிருபத்தின் பிரகாரம் முதலாம் ஆண்டு மாணவர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்குப் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்கள் தேவையான மாணவர்கள் தொடர்பான ஆவணங்களை மட்டுமே கொண்டு வர வேண்டும் என குறிப்பிடப்பட்டிருப்பினும் - அனுமதி கோரும் மாணவர்களை பாடசாலை அதிபர்கள் அழைத்து வரவேண்டும் எனக் கோருவதில் எந்தவித தவறும் இல்லை.

பெற்றோர் அல்லது பாதுகாவலரை நேர்முகப்பரீட்சை செய்த பின்னர் மாணவர்களை நேர்முகப் பரீட்சை செய்வதில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

## தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாமைக்கு உறுதியான தீர்மானம் இன்மையே காரணம்

### விமல் வீரவன்ச தெரிவிப்பு



கொழும்பு

சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டிய தருணத்தில் எடுத்து அதனை உறுதியாகத் தீர்த்துவைக்க முயற்சி எடுக்காததாலேயே தேசியப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாமல் போனதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இதுவரை எடுக்கப்பட்ட செயல்வழிகளின் அர்த்தம் சூனியமென்பதால் பிரச்சினையைத் தீர்ப்பதில் இதுவரை தாமதமேற்பட்டது. பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு நிரந்தரத் தீர்வு வேண்டுமென நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

தீர்வுக்குச் செல்லும்போது பலவித விமர்சனங்கள் தெரிவிக்கப்படும். இணக்கப்பாட்டுக்கு வரும்போது பல்வேறு தரப்பினரதும் கருத்துக்கள், எண்ணக்கருக்கள் அவசியமாகின்றன.

எனவே விமர்சனங்களுடான அடிப்படை மீதான இணக்கப்பாட்டுக்கு வருவதைத் தடைசெய்ய வேண்டியதில்லை. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைவரையும் ஒன்றிணைப்பின் குறிக்கோளாக உண்மையான நோக்கமாக அது அமைய வேண்டும்.

யுத்தத்தால் எவருக்குமே வெற்றி தோல்வி இதுவரை கிடைக்கவில்லை என்ற வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அப்படியாயின் இரண்டாவது மகா யுத்தத்தில் வெற்றிபெற்றது எப்படி? உலகில் அதிக நாடுகள் யுத்தம் செய்து வெற்றியைப் பெற்றுள்ளன. எந்தவொரு அரசியல் பிரச்சினையும் தேசியப் பிரச்சினையாகின்றது.

எனவே தீர்வுக்கு முன்வைக்கும் தேசியக் கொள்கை பரந்த இணக்கப்பாட்டுடன் இருக்கவேண்டும் என அவர் மேலம் தெரிவித்தார். (தே)

## இரும்பு வர்த்தகம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பமாகின!

கொழும்பு

விடுதலைப்புலிகள் பயன்படுத்துவதற்காக கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வரும் இரும்பு வர்த்தக நடவடிக்கை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விசாரணைகளை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். வவுனியா பொலிஸார் அண்மையில் பாரியளவிலான இரும்பு பொதி ஒன்றை கைப்பற்றியதுடன் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

இந்த சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

24 பாரிய இரும்பு பொதிகளுடன் 400 பற்றரிகளை வவுனியா பொலிஸார் அண்மையில் கைப்பற்றியிருந்தனர்.

## நிபந்தனைக்கு இணங்கினால் அமைச்சு பதவிகளை ஏற்போம்!

### ஜே.வி.பி. திட்டவட்டமாக அறிவிப்பு

கொழும்பு —

அரசிடம் 20 நிபந்தனைகளை முன்வைத்து பேச்சுகள் நடத்தப்பட்டு வருவதாகவும், இதில் சில கோரிக்கைகளுக்கு தற்போது இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும், ஏனைய கோரிக்கைகளுக்கும் முழுமையான இணக்கப்பாடு ஏற்படுமானால் அரசுடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்வது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த தெரிவித்துள்ளதாவது -

அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் அரைப் பகுதிக்காவது இணக்கம் காணப்பட்டால் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போது ஏற்பட்டுள்ள புதிய அரசியல் நிலைமை குறித்த பகுப்பாய்வு, சர்வதேச அழுத்தங்களின் தன்மை, விடுதலைப் புலிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டிய முறைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு 20 கோரிக்கைகள் அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதில் வெளிநாடுகளுடனான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது , சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக நோர்வே அரசுடனான நடவடிக்கைகளை எவ் வாறு கையாள்வது, விடுதலைப் புலிகள் தொடர்பாக எவ்வா றான நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் .

முப்படைகள் மற்றும் பொலிஸ் ஆகியவற்றின் சட்ட மூலம், சமாதான நடவடிக்கைகளை எவ்வாறு செயற்படுத்துவது அத்துடன் போர்நிறுத்த ஒப்பந்தம் பற்றி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இந்தக் கோரிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.


இதற்கு மேலதிகமாக அமைச்சுக்களின் எண்ணிக்கை, தனியார் மயப்படுத்தல் நிர்வாகங்களில் லஞ்ச ஊழலை ஏற்றுக் கொள்ளாமை, வடக்கு - கிழக்கு அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், குறித்தும் இந்தக் கோரிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த விடயங்கள் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை அரச தரப்புப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சில் சிலவற்றுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நாளைய தினமும் பேச்சு நடத்தப்படுமென லால்காந்த மேலும் தெரிவித்தார். (தே)

# இனப்பிரச்சினை ஏற்பட இனவாதமே காரணம்!

### ஐ.தே.கவின் ராஜித சேனாரட்ண சொல்கிறார்



கொழும்பு —

தேசிய இனப்பிரச்சினைக்கு இனவாதமே அடிப்படைக் காரணமென ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

1956 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெறுவதற்காக - பண்டாரநாயக்க இனவாத சக்திக்கு இரையாகிப் போனார். 24 மணி நேரத்தில் அரசமொழியாக சிங்களத்தையும், அரச மதமாக பௌத்தத்தையும் கொண்டு வருவதாக உறுதி வழங்கித்தான் அன்று அவர் அதிகாரத்துக்கு வந்தார்.

அன்றிலிருந்து இன்றுவரை எவராலுமே அதனை செயற்படுத்த முடியாமற் போனது. பண்டாரநாயக்க அன்று மூட்டிவிட்ட இனவாத நெருப்புக்கு - பண்டா - செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறிந்ததன் மூலம் ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் எண்ணெய் ஊற்றினார்.

பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அன்று புத்த பிக்குகள் உண்ணாவிரதமிருந்தனர். இவற்றுக்கெல்லாம் பண்டாரநாயக்கவும் ஜே. ஆரும் தான் பொறுப்புக் கூறவேண்டும்.

1966 இல் டட்லி - செல்வா ஒப்பந்தத்துக்கு இடதுசாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. அதேபோன்று 1987 இல் ஜே.ஆர் கைச்சாத்திட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் எதிர்ப்புத் தெரிவித்தன. அன்று அந்த ஒப்பந்தம் செயற்படுத்தப்பட்டிருந்தால் இன்று பிரச்சினைகள் எழுந்திருக்கமாட்டாது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இங்கு வந்த இந்தியப் படைகளை விரட்டியடிப் போமென அன்று ஜே.வி.பியினர் கூக்குரலிட்டனர்.

கடந்த காலத்தில் ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் அனுசரணையுடன் ஏற்படுத்திக் கொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் ஜே.வி.பி. எதிர்த்துவருகிறது.

அன்றிலிருந்து இன்று வரை தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தேசியப் பிரச்சினையைப் பயன்படுத்திக் கொள்வதே நிகழ்ந்தது.

இவ்வாறு நிகழுமெனில், இனவாத சேற்றுத் தரையில்தான் சதாகாலமும் மூழ்குவதற்கு நேரும். அரசியல் மற்றும் தனிப்பட்ட கருத்துக்களுக்கு தோள் கொடுத்துக் கொண்டிருப்பதை விட இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்வர வேண்டும்.

இந்த தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தடைகள் கொண்டு வருவதற்குப் பதிலாக கொள்கை உட்ன்பாட்டுக்கு வருவது நல்லது. இந்த இணக்கப்பாடுகளின் போது விமர்சனம் செய்யாமலிருப்பது முக் கியமானதென சொல்ல முடியாது.

இந்த உலகத்திலுள்ள முக்கியமான பிரச்சினைதான் இனவாதம். சிங்களவர்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை தலையினால் அல்ல நெஞ்சினாலேயே தேடினர்.

எப்பொழுதும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு நெஞ்சினால் தீர்வைக் காண முடியாதென்பது தற்போது நிரூபணமாகியுள்ளது என ராஜித சேனாரட்ண மேலும் தெரிவித்தார்.



# இலங்கை படைகளுக்கு இந்தியாவில் பயிற்சியா?

### உடன் திருப்பி அனுப்பக் கோருகிறார் ராமதாஸ்

சென்னை —

இலங்கை படை அதிகாரிகள் 45 பேருக்கு இந்தியாவில் பயிற்சியளிக்கப்படுவதற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் ராமதாஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழர் பகுதிகளில் விமானங்கள் மூலம் குண்டு மழை பொழிந்துவந்த சிங்கள இராணுவத்தினர், இப்போது தரைவழித் தாக்குதலையும் ஆரம்பித்துள்ளனர்.

இந்த நிலையில் - கோவையிலுள்ள மத்திய பாதுகாப்புப் படை பயிற்சிக் கல்லூரியில் இலங்கை படையதிகாரிகள் 45 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுவருவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தச் செய்தியில் உண்மையிருக்காது என நாம் கருதியபோது - இலங்கை படையதிகாரிகள் பயிற்சிக்காக கோவை வந்திருப்பது உண்மை தான் என மத்திய பயிற்சிக் கல்லூரியின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழர்களை நசுக்கிவரும் இலங்கை அரசுக்கு இந்தியா எவ்வித உதவியையும் வழங்கக்கூடாது என இங்குள்ள தமிழர்கள் மட்டுமல்ல உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் வேண்டுகின்றனர்.

எத்தகைய உதவிகளை இலங்கைக்கு இந்தியா வழங்கினாலும் - அது ஈழத் தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்பதில் சந்தேகம் இல்லை.

எனவே, கோவையிலுள்ள மத்திய பாதுகாப்புப் படை பயிற்சிக் கல்லூரியில் இலங்கை படை அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுவரும் பயிற்சியை இந்தியா உடனடியாக நிறுத்தி - அவர்களை உடனடியாக கொழும்புக்கு திருப்பி அனுப்பவேண்டும்.

இலங்கைக்கு இராணுவ ரீதியான எந்த உதவிகளையும் வழங்கமாட்டோம் என அறிவித்த மத்திய அரசு - படையதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பயிற்சிக்காக வந்துள்ள இலங்கை படையதிகாரிகளை உடனடியாக கொழும்புக்கு அனுப்புமாறு எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் - மத்திய உள்துறை அமைச்சரை வலியுறுத்தவுள்ளனர் என த் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையுடன் இந்தியா ஒப்பந்தம்?

சென்னை —

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க, இந்தியா - இலங்கை இடையே ஒப்பந்தம் ஒன்றை செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்துமென தமிழக நிதியமைச்சர் அன்பழகன் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதைத் தடுக்கவும் - மீனவர்களுக்கு பாதுகாப்பளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மீன்பிடிக்கும் போது தவறுதலாக மீனவர்கள் எல்லையைத் தாண்டிச் சென்றாலும் - அவர்களைக் கைதுசெய்து இந்தியாவிடம் ஒப்படைக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

# விசாக் காலம் முடிவடைந்த பின்னரும் தமிழகத்தில் தங்கிநிற்கும் இலங்கையர்!

### சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவதாகக் குற்றச்சாட்டு

சென்னை —

இலங்கையிலிருந்து விஸாவில் தமிழகம் வந்த பலர் திரும்பிச் செல்லாமல் இருப்பதாகவும் - இவர்கள் பல்வேறு சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவதாகவும் - இவர்களைக் கண்காணிக்க வேண்டிய கியூ பிரிவு பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்ப்பதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

இலங்கையிலிருந்து தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சுற்றுலா மற்றும் உறவினர்கள் உள்ளிட்ட காரணங்களை முன்வைத்து ஏராளமானோர் விஸா பெற்று வருகின்றனர்.

இவ்வாறு தமிழகம் வருவோர் - விஸாக் காலம் முடிவடைந்த பின்னரும் திரும்பிச் செல்லாதிருப்பதும் - அவர்களில் பலர் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுவதும் அம்பலமாகியுள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் போர்ச் சூழல் காரணமாக சட்டவிரோதமாகப் படகுகளில் கடவுச்சீட்டின்றி வரும் அகதிகள் குறித்த விபரங்களை துருவிதுருவித் திரட்டும் பொலிஸார் - அவர்களை வெளியில் தங்க அனுமதிக்காது - அகதிகள் முகாமுக்கே அனுப்புகின்றனர்.

ஆனால் - இலங்கையிலிருந்து கடவுச்சீட்டு பெற்று தமிழகம் வருவோரில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திருச்சியின் பல இடங்களில் வாடகை வீடுகளில் வசித்து வருகின்றனர்.

விஸா காலம் முடிவுற்ற பின்னரும் நாடு திரும்பாத இவர்கள் குறித்த விபரங்களைத் திரட்டி, உடனடியாக வெளியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய கியூ பிரிவு பொலிஸார், அவர்களிடம் இருந்து பெரும்தொகையான பணத்தைப் பெற்று, கண்டும் காணாமல் இருப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

## தனி வீடு ஒதுக்க இலங்கை அகதியிடம் லஞ்சம் பெற்ற அதிகாரி

மதுரை —

தமிழகம் - மதுரையில் இலங்கை அகதி ஒருவருக்கு தனிவீடு ஒதுக்கிக் கொடுக்க 3 ஆயிரம் ரூபா லஞ்சம் வாங்கிய அகதிகள் முகாம் வருவாய் அதிகாரியும், அவரின் பெண் உதவியாளரும் கைதுசெய்யப்பட்டனர்.

மதுரை - ஆனையூரில் அமைந்துள்ள ஈழத் தமிழர் அகதிகள் முகாமில் வசிக்கும் ரவி என்பவருக்கு தனி வீடு ஒதுக்கிக்கொடுக்கவே லஞ்சம் பெறப்பட்டதாகத் தெரியவருகிறது.

# மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு பெற பாதுகாப்பு வசதிகள் செய்யப்படவில்லை

## பெற்றோர் தரப்பில் கடும் விசனம்

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ளும் யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு பாதுகாப்புத் தொடர்பான அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்பட வில்லையென பெற்றோர்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

யாழ். மாவட்டத்தில் இருந்து மாகாண மட்டப் போட்டிகளுக்காக திருகோணமலைக்குச் செல்லும் மாணவர்களைச் சம்பந்தப்பட்ட பாடசாலை நிர்வாகத்தினதும், பெற்றோரினதும், விருப்பத்துக்கேற்ப போட்டிகளில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யுமாறு வலயங்கள், மாவட்டங்கள் என்பவற்றின் கல்வி நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்கள் கூறியிருப்பதாகவும் -

எனினும், மாணவர்களை வயது ரீதியாக அழைத்துச் செல்வதற்கு எந்தவிதமான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

வவுனியாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் வடக்கு - கிழக்கு ஆளுநரின் உத்தரவுக்கமைய ஒத்திவைக்கப்பட்டு, திருகோணமலையில் இன்று தொடக்கம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

திருகோணமலையின் இயல்பு நிலை தற்போது பாதிக்கப்பட்டுள்ளதால், வட பகுதி மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு திருகோணமலைக்குச் செல்லத் தயங்கும் அதேவேளை - போட்டிகளில் கலந்து கொள்ளாமல் விடுவதால் தங்களுக்கு எதிர்காலத்தில் கிடைக்கப்போகும் பல நன்மைகள் இல்லாமல் போய்விடும் என்றும் அஞ்சுகின்றனர்.

இந்த நிலையில் மாணவர்களை - குறிப்பிட்ட கல்வி வலயம் சார்பில் கலந்து கொள்ளும் வீரர்கள் என்றோ அன்றி, மாவட்டங்களின் சார்பில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்கள் என்றோ எந்த விதமான அத்தாட்சிகளையோ அல்லது சம்பந்தப்பட்டவர்களின் படங்களுடன் கூடிய சான்றுகளை வழங்கவோ அல்லது அவர்களை கல்வி வலய ரீதியிலோ அல்லது மாவட்ட ரீதியில் அழைத்துச் செல்வதற்கோ எந்த ஏற்பாடுகளும் செய்யாமல் கல்வி நிர்வாகிகள் அசமந்தமாக இருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

மாணவர்கள் திருகோணமலைக்குச் செல்வதற்கு உரிய சில வசதிகளைச் செய்து கொடுப்பதற்குக் கல்வி நிர்வாகிகள் முன்வராவிடின்- திருகோணமலையில் நடைபெற விருக்கும் போட்டிகளில் கலந்து கொள்ளும் வட பகுதி மாணவர்கள் பலர் பாதுகாப்புச் சிரமங்களை காரணம் காட்டி போட்டிகளில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கிக் கொள்ளலாம் என்று பெற்றோர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்-

வட பகுதி மாணவர்கள் திருகோணமலையில் நடைபெறும் போட்டிகளுக்குச் செல்வதிலுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் நியாயமானதே. போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களை கல்வி வலய ரீதியில், மாவட்ட ரீதியில் திருகோணமலைக்கு அழைத்து வருவதற்கு சம்பந்தப்பட்ட கல்வி வலய, மாவட் கல்வி நிர்வாகம் ஏற்பாடு செய்ய முன்வந்தால், அதற்கான அனுசரணை உதவிகளை வழங்க மாகாணக் கல்வித் திணைக்களம் தயாராக இருக்கிறது என்று கூறினார்.

## சிறந்த விவசாயிகள் தெரிவுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் சிறந்த விவசாயிகளை தெரிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க விரும்பும் விவசாயிகள் - இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள 12 விவசாயப் போதனாசிரிய பிரிவுகளிலிருந்தும் பயிர் செய்யும் துறைகளை அடிப்படையாகக் கொண்டு விவசாயிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

சிறந்த விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக சான்றிதழ்களும், பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது. இந்தப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் விவசாயிகள் - தமது பிரிவு போதனாசிரியருடன் தொடர்பு கொண்டு அதற்கான விண்ணப்பப் படிவங்களை பெற்று விண்ணப்பிக்குமாறு யாழ் . மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## வாக்காளர் பதிவை மேற்கொள்ளவும்

குரும்பசிட்டி —

குரும்பசிட்டியைச் சேர்ந்த 18 வயதை அடைந்தவர்கள் வாக்குரிமைப் பதிவை மேற்கொள்ள குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் இதற்கென கிராம அலுவலரும், ஏனைய உத்தியோகத்தர்களும் சமூகமளிக்கவுள்ளனர்.

ஜே/242 -243 கிரம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் தத்தம் அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழ் பிரதிகளைக் கொண்டு அன்றைய தினம் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

சாவகச்சேரியில் —

சாவகச்சேரியில் வளர்ப்பு நாய்களுக்கான விசர் நோய் தடுப்பூசி ஏற்றும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே இந்தத் திகதிகளில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளுமாறு சாவகச்சேரி பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

சாவகச்சேரியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்தடுப்பூசி ஏற்றப்படும் இடங்களும் நேரமும் வருமாறு -

இன்று காலை 8 மணி முதல் 10 மணி வரை மறுவன் பாலர் பாடசாலை, பாலையடி சன சமூக நிலையம், சிறிமுருகன் ச.ச. நிலையம் , 10 மணி முதல் 12 மணி வரை மாவடி பிள்ளையார் கோவிலடி, பன்றிக்கேணி முருகன் கோவிலடி, ஊர் எல்லை சந்தி 12 மணி முதல் 3 மணி வரை - இ.செஞ்சிலுவை சங்க பழைய காரியாலயம் மீசாலை கிழக்கு

நாளை காலை 8 மணி முதல் 10 மணி வரை - மீசாலைமேற்கு வீனஸ் ச.ச நிலையம், ஊர்எல்லை சந்தி, விக்னேஸ்வரா பாடசாலையடி 10 மணி முதல் 12 மணி வரை - குடும்ப சுகாதார அலுவலகம், புதிய புகையிரத நிலையத்தடி, பொதுசுகாதார பணிமனை மடத்தடிச் சந்தி, 12 மணி முதல் 3 மணி வரை - பெரிய அரசடி ச.ச நிலையம், சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவிலடி.

நாளை மறுதினம் 8 மணி முதல் 10 மணி வரை -நாமகள் பாலர் பாடசாலை, இத்தியடி ச.ச நிலையம், சாரதா ச.ச நிலையம், சங்கத்தானை கிராம அலுவலர் அலுவலகம்,

10 மணி முதல் 12 மணி வரை - முருகன் கோவிலடி, தாமோதரம்பிள்ளை வீதி சந்தி, 12 மணி முதல் 3 மணி வரை - இந்து ஆரம்ப பாடசாலையடி, வைரவர் கோவிலடி, மீனாட்சி அம்மன் கோவிலடி.

06.08.06 - 8 மணி முதல் 10 மணி வரை - அப்துல்லா கிளைசந்தி, உப்பு கே[illegible]யடி சந்தி, பெரிய மாவடி ச.ச நிலையம், 10 [illegible]ணி முதல் 12 மணி வரை - றோமன் கத்தோலிக்க பாடசாலையடி, முருகன் கோவிலடி சாவகச்சேரி வடக்கு கிராம அலுவலர் அலுவலகம், 12 மணி முதல் 3 மணி வரை - புளியடிச் சந்தி, உதய சூரியன் ச.ச நிலையம், சக்தி அம்மன் பாடசாலையடி.

07.08.06 - காலை 8 மணி முதல் 11 மணி வரை -டச்சு வீதி பூவேந்தன் பாலர் பாட சாலை, புளியடிச் சந்தி குடும்ப சுகாதார நிலையம், கூட்டுறவுச் சங்க கிளையடி. காலை 11 மணி முதல் 3 மணி வரை சாவகச்சேரி மிருக வைத்திய அலுவலகத்தடி, நகர சபை அலுவலகம்.

08.08.06 - காலை 8 மணி முதல் 11 மணிவரை கச்சாய் அம்மன் கோவிலடி, ஜி.ரி. எம்.எஸ். பாடசாலை, சங்கத்தானை கிராம அலுவலர் அலுவலகம், லியோரியார் சேச் .

(29)

## கல்வி நிர்வாக சேவை ஆட்சேர்ப்பு 460 பேருக்கு நேர்முகப்பரீட்சை

யாழ்ப்பாணம்—

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் 460 பேருக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய ஆவணங்களைத் தயார் செய்யுமாறு கல்வி அமைச்சு முன்னறிவிப்புக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை இந்த வருட முற்பகுதியில் கொழும்பில் நடத்தப்பட்டது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய வர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் கூடிய விரைவில் நடைபெற விருக்கின்றன.

இந்த நேர்முகப்பரீட்சைக்குத் தயாராவதற்கான முன்னறிவிப்புக் கடிதங்கள் கல்வி அமைச்சால் நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான பதவி வெற்றிடங்கள் ஆயிரக் கணக்கில் இலங்கை முழுவதும் நிரப்பப்படாமலிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அம்புலன்ஸ் படகு சேவையை சீராக்க அனலைதீவு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம் —

நோயாளர்களை ஏற்றிக் கொண்டு அனலைதீவிலிருந்து செல்லும் அம்புலன்ஸ் படகுச் சேவையை சீராக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நயினாதீவு மற்றும் அனலைதீவிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படும் அவசர நோயாளர்களை ஊர்காவற்துறை இறங்குதுறைக்கு எடுத்துச் செல்லவென அம்புலன்ஸ் படகொன்று உள்ளது.

இந்தப்படகு நயினாதீவு துறையில் தரித்து நிற்பது வழமையாகும். அத்தோடு நயினாதீவு சுற்றயல் கூறு மருத்துவமனையின் கட்டுப்பாட்டிலேயே இந்தப் படகுள்ளது.

அனலைதீவிலுள்ள சுற்றயல் கூறு மருத்துவமனையிலிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படும் அவசர நோயாளரை அழைத்துச் செல்ல நயினாதீவிலிருந்தே அம்புலன்ஸ் படகை அழைக்க வேண்டியுள்ளது.

இதில் பலவேளைகளில் தடங்கல் ஏற்படுவதாக அனலைதீவு மக்கள் தெரிவித்தனர். குறிப்பாக இரவு நேரங்களில் நயினாதீவிலிருந்து அம்புலன்ஸ் படகை அனலைதீவுக்கு வரவழைப்பதில் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுவதாகவும், அவசர நோயாளரை மறு கரைக்கு எடுத்துச் செல்ல கடற்படை உதவியை நாடவேண்டியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆதலால் நயினாதீவில் தரித்து நிற்கும் அம்புலன்ஸ் படகை அனலைதீவு சுற்றயல்கூறு மருத்துவமனை தேவைகளுக்கும் பயன்படுத்த வழிவகைகளை ஏற்படுத்துமாறு அனலைதீவு மக்கள் கேட்டுள்ளனர்.

## --- நல்லூரில் இன்று ---

மானிப்பாய் —

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 3 மணிககு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும்.

இந்த நிகழ்வில் - 'கிரியைகள் உணர்த்தும் தத்துவங்கள்' என்னும் கருப்பொருளில் சைவப்புலவர் எஸ்.பரமேஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். இதைத் தொடர்ந்து தெல்லிப்பளை - பன்னாலை கணேசா அறநெறிப் பாடசாலை மற்றும் உரும்பிராய் திருக்குமரன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெறும். (100)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### அகவை எட்டு



பெயர் : சி.நீரஜன்
முகவரி : வதிரி.

### அகவை ஒன்பது



பெயர் : ப.கம்ஷா
முகவரி : கொக்குவில்.





அண்மையில் நவாலி வீதியில் அமைந்துள்ள துரை ஐயா திருமண மண்டபத்தில் நடைபெற்ற மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் 2006/2007 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வில் - புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சி.சுந்தரேஸ்வரனையும் கழக அங்கத்தவர்களையும் படங்களில் காணலாம்.

(100)

# தமிழ் மக்கள் ஓர் அணியில் திரள்வதன் மூலம் சிங்களப் பேரினவாத அரசை தோற்கடிக்கலாம்

## கடற்புலிகளின் தளபதி விநாயகம் தெரிவிப்பு



கிளிநொச்சி—

யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்படுமானால், தமிழ் மக்கள் அனைவரும் ஓர் அணியில் திரண்டு, சிங்களப் பேரினவாத இராணுவத்தைத் தோற்கடித்து, தமிழ்ழம் எனற இலகைை அடையவேண்டும் என கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் தெரிவித்தார்.

லெப்ரினன்ட் கேணல் மறவன் மாஸ்டர் பயிற்சிப்பாசறையில் பயிற்சி பெற்ற 14 அணியினருக்குமான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் சிறப் புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது - அரசாங்கம் போரை ஆரம்பித்து ஒரு மாதகாலமாகத் தமிழ்மக்களை அழிக்கும் நாசகார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் விடுதலைப்புலிகள் என்ன படைக் கட்டுமானத்தை வைத்திருந்தார்களோ, அதைத்தொடர்ந்தும் வைத்துக் கொள்ள வேண்டும்.

நாகர்கோயில் கடற்கரை முதல் நாயாறு வரையான கரையோரப் பிரதேசங்களை பிடிப்பதற்கு எதிரி கடும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றான். யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்படுமானால் தமிழர் தாயகத்தை விடுதலைப்புலிகள் முற்றாகப்பிடித்து விடுவார்கள் என்ற அச்ச உணர்வும் அரச படைகளிடம் மிகையாகக் காணப்படுகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கே போர் நிறுத்த உடன்பாடு என்ற ஒன்று உள்ளதா? என்ற சந்தேகம் நிலவுகிறது.

இந்த நிலையில், நடைபெறப் போகும் யுத்தத்தில் தமிழ் மக்கள் அனைவரும் ஓர் அணியில் திரண்டு 'தமிழீழம்' என்ற இலக்கை அடைந்து, எங்களை நாங்களே ஆளக்கூடிய வல்லமையை உருவாக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## வரலட்சுமி பூசை

வட்டக்கச்சி—

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் அமைந்துள்ள சிறிரங்க நாதப் பெருமாள் கோயில் வரலட்சுமி பூசை நாளை பி.ப.2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று சுமங்கலிகள் சுபாஷினிகளுக்கான தீபபூசை மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளதுடன் லட்சுமி நாராயணன் உள்வீதி வலம் வரும் நிகழ்வும் நடைபெறும்.

வரலட்சுமி நோன்பிருப்பவர்கள் நேர காலத்தை அனுசரித்து உரிய காலத்தில் பூசையில் கலந்துகொண்டு லட்சுமி நாராயணப் பெருமாளின் திருவருட் கடாட்சத்தைப் பெற்று சிறப்படையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## புலேந்திரன் போசாக்குப் பூங்காவில் புதிய கட்டடம் நேற்று திறந்துவைப்பு

கிளிநொச்சி—

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கோரக்கன்கட்டு புலேந்திரன் போசாக்கு பூங்கா கட்டடத் திறப்பு விழா நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் நடைபெற்றது.


இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து கோரக்கன்கட்டு புதிய குடியேற்றத்திட்டத்தில் வசித்து வரும் சிறார்களின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் முன்பள்ளியும், பகல் பராமரிப்பு போசாக்குப் பூங்காவும் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

அடிப்படை வசதிகளற்ற கண்டாவளைப் பிரதேச கோரக்கன்கட்டுக் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத்திட்டச் செயற்பாடுகளைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டு வருகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதிப் பங்களிப்புடன் அமைக்கப்பட்ட புலேந்திரன் முன்பள்ளி பகல் பராமரிப்பு போசாக்கு பூங்காவில் சிறார்களுக்கான விளையாட்டுச் சாதனங்களும் பொருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடத் திறப்பு விழாவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் சிரமதானப் பணிகள் மூலம் கட்டட வளாகத்தைப் புதுமெருகூட்டியமை குறிப்பிடத்தக்கது.



அண்மையில் பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய சமூக அபிவிருத்தி நிறுவக கற்கை நெறியை நிறைவு செய்தோருக்கான சமூகப்பணி டிப்ளோமா பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வில் - கெயர் சர்வதேச நிறுவன திட்ட அலுவலர் கிருஜா சுபாஸ்கரன், சமூக சேவை கள், சமூக நலன்புரி அமைச்சின் பணிப்பாளரிடம் இருந்து சான்றிதழைப் பெற்றுக் கொள்வதையும், விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தவர்களையும், பட்டம் பெற்றவர்களையும் படங்களில் காணலாம்.

## வவுனியாவில் பத்து வீடுகளில் கொள்ளையர்கள் கைவரிசை!

வவுனியா—

வவுனியாவில் கடந்ததிங்கட்கிழமை 10 வீடுகளில் ஒரே நேரத்தில் கொள்ளையிடப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தெற்கு இலுப்பைக் குளம், சேலிக்குளம்,வெள்ளப்புனம் ஆகிய இடங்களில் உள்ள வீடுகளிலேயே கொள்ளையிடப்பட்டுள்ளது.

கொள்ளையர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் தெற்கு இலுப்பைக்குளம் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் பெண்ணொருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்து முள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வவுனியா பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

## வீதி புனரமைக்கப்படாததால் மக்கள் போக்குவரத்தில் சிரமம்

புதுக்குடியிருப்பு—

புதுக்குடியிருப்பில் கடந்த வருடம் இடம்பெற்ற பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் பாதிப்படைந்த பல வீதிகள் இது வரை புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ளதால் மக்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனால் புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை பிரதான வீதியிலிருந்து உள்ளே செல்லும் வீதிகளால் மக்கள் பயணம் செய்யமுடியாத நிலை இருந்து வருகின்றது.

சில வீதிகளில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அவை பூரணப்படுத்தப்படாமலேயே காணப்படுகிறது.

இதனால் விசனமடைந்த மக்கள் - இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்ட போது இந்த வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதி இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

மழை காலம் தொடங்குவதற்கு முன்னர் இந்த வீதிகள் புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்தால் வீதிகள் அள்ளிச் செல்லப்படுவதுடன், மக்களின் பல குடியிருப்புக்களும் நாசமாகும் நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

(வெ)

## வீதிப்போக்குவரத்து குறித்து காவல்துறை விளக்கமளிப்பு

புதுக்குடியிருப்பு—

புதுக்குடியிருப்பு காவல் பணிமனையின் வீதிப்போக்கு வரத்து பிரிவினர் போக்குவரத்து நடைமுறைகள் குறித்து மக்களுக்கு விளக்கமளித்துவருகின்றனர்.

சகலமக்களையும் வீதிப்போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கூறும் காவல்துறையினர் - வீதி ஒழுங்கு விதிகளை மீறுவோர்கள் மீது நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றனர்.

இதனால் வீதிவிபத்துக்களும் புதுக்குடியிருப்பு பகுதியில் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வெ)

## தண்ணீர் இல்லாமையால் ஒட்டுசுட்டான் மக்கள் சிரமம்

ஒட்டுசுட்டான்—

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேட்டு நிலத்தில் வாழும் மக்கள் தண்ணீர் வசதியின்றி பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது நிலவும் கோடை காலத்தில் கடும் வரட்சி நிலவுவதால் இவர்கள் மிகுந்த சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

கெருடாமடு, பேராறு, சின்னச்சாளம்பன், பெரியசாளம்பன், ஜீவநகர், வசந்தபுரம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களே இந்த நிலைமையை எதிர்நோக்கி வருகின்றனர்.

தண்ணீர் வசதியின்மை காரணமாக இந்தப் பிரதேசங்களில் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன.

இந்த நிலையில் இந்தப் பகுதி மக்கள் தமக்குத் தண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தருமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஓவியக் கண்காட்சியும் பரிசில்கள் வழங்கலும்

கிளிநொச்சி—

கரும்புலிகள் தினத்தைமுன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பால் நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் - முல்லைத்தீவு வலய மட்டத்தில் இருந்து பங்குபற்றிய மாணவர்களுக்கான பரிசல்களும், சான்றிதழ்களும் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு வித்தியானந்தாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு கோட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் அன்பு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்-

பொதுச்சுடரை வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் சிவலிங்கம் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றினார்.

கரும்புலிகளின் பொதுப் படத்துக்கான ஈகச்சுடரை முல்லைத்தீவு மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் சுடர் ஏற்றிவைக்க, மலர் மாலையை முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் மயூரன் அணிவித்தார்.

கரும்புலி கப்டன் மில்லரின் திருவுருப் படத்துக்கான ஈகச்சுடரை முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபர் அல்பிரட் ஏற்றிவைக்க, மலர்மாலையை இரணைப்பாலை றோ.க. பாடசாலை ஆசிரியர் பரமேஸ்வரன் அணிவித்தார்.

கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணியின் திருவுருவப்படத்துக்கான ஈகச்சுடரை தமிழீழ தேசிய தொலைக்காட்சி பொறுப்பாளர் அருணா ஏற்றிவைக்க, மலர்மாலையை தனியார் கல்வி நிலைய இணைப்பாளர் மோகன் அணிவித்தார். தொடர்ந்து ஓவியக் கண்காட்சி மண்டபத்தை முல்லைத்தீவு வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சிவராசா திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை வித்தியானந்தக் கல்லூரி அதிபர் சிவலிங்கம், முல்லை. வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சிவராசா, தண்ணீரூற்று வலயப் பொறுப்பாளர் பரன் ஆகியோரும் - சிறப்புரைகளை தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தனும் ஆற்றினர்.

## சூழல் மேம்பாட்டு மாத விழிப்புட்டல் கருத்தரங்கு

கிளிநொச்சி—

சூழல் மேம்பாட்டு மாதத்தை முன்னிட்டு தமிழீழ சுகாதார சேவையினரால் பாடசாலைகளில் சூழல் தொடர்பான கருத்தூட்டல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் முதல் காலை 10 மணியளவில் முள்ளிவாய்க்கால் கிழக்கு பாபு முன்பள்ளியிலும், முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க பாடசாலையிலும், முள்ளிவாய்க்கால் மேற்கு முன்பள்ளியிலும் விழிப்பூட்டல் நிகழ்வுகள் இடம்பெற்றது.

அத்துடன், மாவட்ட ரீதியாக முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தயாபரன் தலைமையில் பிரதேச ரீதியாக இந்த விழிப்பூட்டல் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

பிரதேசசபை செயலாளர்கள், தமிழீழ சுகாதாரசேவை பிரதிநிதிகள், சூழல் மேம்பாடு தொடர்பான கருத்தூட்டல்களை முன்னெடுத்து வருகின்றனர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தமிழீழ சுகாதார சேவை சார்பில் தமிழீழ சுகாதார சேவை மாவட்ட இணைப்பாளர் சுரேஸ் கலந்துகொண்டார்.

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!
நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து.
- திருக்குறள்-

## நமது நோக்கு

# 'மனிதாபிமான' யுத்தம்

திருகோணமலைத் துறைமுகத்துக்குள் தாக்குதல் நடத்தப்பட்டதுமே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ - இந்தியாவை நோக்கி தனது கவனத்தை திருப்பியிருக்கிறார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு - இலங்கையின் நிலைமை தொடர்பாக அவர் பேசியிருக்கிறார். இந்தத் தொலைபேசி உரையாடலின் இராஜதந்திர அர்த்தம் இந்தியாவின் இராணுவ உதவிகளைக்கோருவதாகவே இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

சீனன்குடாவில் இந்திய எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் களஞ்சியங்கள் இருக்கின்ற நிலையில் - இந்த ஒன்றையே சாட்டாகக் கொண்டு திருமலைத் துறைமுகம் மீதான தமது பாதுகாப்பு வலைப்பின்னலை விரிவாக்க மகிந்த அரசு முற்படுகிறது.

திருகோணமலையில் மாவிலாறு நீர்த்தடுப்பு அணையைத் திறந்துவிடுவதற்காக என்ற பெயரில் அரசு தொடங்கிய 'மனிதாபிமான யுத்தம்' - இன்று மக்களைப் பாதுகாப்பதற்கான யுத்தமாக புலிகளால் முன்னெடுக்கப்படவேண்டிய சூழலை ஏற்படுத்தியிருக்கிறது.

அதுமட்டுமன்றி திருகோணமலைத் துறைமுகம் மற்றும் சிங்களக் குடியேற்றப் பிரதேசங்களில் அரச படைகளின் ஆதிக்கம் தளர்வடைகிறது என்றவுடன் - ஜனாதிபதி மகிந்த இந்தியாவின் உதவியை நாட முற்படுவதாகவே தோன்றுகிறது.

இது மகிந்தவினது உத்தி மட்டுமல்ல - ஜே. ஆரும் இதையேதான் செய்தார். சந்திரிகாவும் இதைத்தான் செய்தார். சிங்கள அரசியல் தலைமைகள் காலம்காலமாக தமது நலனைக் காக்க இந்தியாவின் உதவிகளைப் பெறுவது வழக்கமானதுதான்.

ஆனால், இப்போது மகிந்தவுக்கு இந்தியா எந்தளவுக்கு உதவ முன்வரும் என்பது முக்கியமான கேள்வி. ஏனென்றால், மன்மோகன்சிங் அரசு தமிழகக் கட்சிகளின் தயவில்தான் ஆட்சி நடத்துகிறது.

கூட்டணிக் கட்சிகளைப் பகைத்துக்கொண்டு ஒருபோதும் மன்மோகன்சிங் இராணுவ ரீதியாக மகிந்தவுக்கு உதவமுடியாது. அது அவரது அரசை ஆட்டம்காணச் செய்துவிடக்கூடும்.

அடுத்து இப்போது மகிந்த அரசு தொடுத்த போரால்தான் யுத்த சூழல் ஏற்பட்டிருக்கிறதே தவிர - புலிகளாக யுத்தப் பிரகடனம் செய்யவில்லை. மகிந்த அரசு - புலிகள் மீது நடத்தும் தாக்குதல்கூட யுத்தப்பிரகடனம் அல்ல என்றே சொல்கிறது.

இது ஒரு மனிதாபிமான யுத்தம் என்றுதான் மகிந்தவின் அரசு கூறுகிறது. சந்திரிகா நடத்தியது சமாதானத்துக்கான யுத்தம். மகிந்த இப்போது நடத்துவது மனிதாபிமான யுத்தம்.

மனிதாபிமான உதவிக்கான இந்த யுத்தம் ஏன் தொடங்கியது? மாவிலாறு நீரை சிங்களக் குடியேற்ற கிராமங்களுக்குத் திறந்துவிடுவற்குத் தானே.

மாவிலாறு நீரைத் திறந்துவிடுவதற்கு மகிந்த அரசு நடத்தும் யுத்தத்துக்கு இந்திய அரசு உதவ முனைந்தால் - அது உள்நாட்டில் பெரும் விளைவுகளுக்கும் முகங்கொடுக்க நேரிடும்.


கர்நாடக அரசு காவிரி நீரைத் தடுத்து தமிழக விவசாய நிலங்கள் பாழ்பட்டுப்போய், விவசாயிகள் பட்டினியால் செத்துத் தொலைந்தபோது இந்திய மத்திய அரசு என்ன செய்தது?

கர்நாடகத்தின் முரண்டுப்போக்கை மத்திய அரசு தட்டிக்கேட்டு நீரைத் திறந்துவிடவில்லை. அதே இந்திய மத்திய அரசு மாவிலாறு நீரைத் திறந்துவிட சிங்களவர்களுக்கு உதவியாக களம் இறங்கி னால் தமிழக மக்கள் மட்டுமல்ல - ஏனைய இந்திய மாநிலத்தவர்களும் மன்மோகன்சிங்கை சும்மா விட்டுவிடமாட்டார்கள்.

எனவே, மாவிலாறில் தொடங்கிய 'மனிதாபிமான யுத்தத்தில்' இந்தியா இராணுவ உதவிகளைச் செய்யும் என்ற மகிந்தவின் கனவு ஒருபோதும் நனவாகாது.


267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் பிரகடனப்படுத்தவில்லை

## என்கிறார் கெகலிய ரம்புக்வெல



கொழும்பு—

விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் பிரகடனப்படுத்தப்படவில்லை. அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 2002 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருவதாக பாதுகாப்புப் பேச்சாளரும், அமைச்சருமான கெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

தண்ணீர் பிரச்சினைக்காக நாம் யுத்தத்துக்குச் செல்லவில்லை. மனிதாபிமானப் பிரச்சினைக்காகவே இதை மேற்கொண்டுள்ளோம். யுத்த நிறுத்தத்திலிருந்து விலகுவதாக இருந்தால் - யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் தெரிவித்துள்ள 14 நாட்கள் முன்னறிவிப்பை நாம் அறிவிப்போம்.

விடுதலைப்புலிகள் மாவிலாறு அணைக்கட்டைத் திறந்து - அதனை ஒருபோதும் மூடமாட்டோமென உறுதியளித்தால் படையினரால் மேற்கொள்ளப்படும் சகல விதமான தாக்குதல் நடவடிக்கை களும் உடனடியாக நிறுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

சேருநுளவர ரஜமகாவிகாரையின் தலைவர் சரனகீர்த்தி சேருனுவிர தேரர் கூறுகையில் -

அரசாங்கம் இராணுவ நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கு முன்பாக அணைக்கட்டைத் திறக்க தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருந்ததாக தமக்குத் தெரிவிக்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகையில் - அரசாங்கமானது சமாதானத்தைப் பேசிக்கொண்டு யுத்தத்தை நடைமுறைப்படுத்திவருகிறது. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தால் மாவிலாறு உரிமை கைவிட்டுப்போகவில்லை. 1996 ஆம் ஆண்டு ரிவிரெச இராணுவ நடவடிக்கையின்போது இராணுவத்தை அங்கிருந்து விலக்கிக்கொண்டபோதே - மாவிலாறு அணை உரிமையை இழந்துவிட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# முகாமைத்துவ உதவியாளர்கள் பட்டதாரி ஆசிரியராக நியமனம்

கொழும்பு—

முகாமைத்துவ உதவியாளர்களாக வடக்கு -கிழக்கு மாகாண பாடசாலைகளில் பணிபுரிந்துவந்தவர்கள் தங்களது சுயவிருப்பின்பேரில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரால் இவர்களுக்கான நியமனப் பத்திரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 ஆம் திகதிமுதல் நடைமுறைக்குவரும் வகையில் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு தரம் 1 இற்கு இவர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள். முகாமைத்துவ உதவியாளர்களாக பல வருடங்கள் பணிபுரிந்தவர்களில், இலங்கை ஆசிரிய சேவையில் இணைந்து சேவையாற்ற விரும்புபவர்க்ளின் விபரம் வலய கல்விப் பணிமனை ஊடாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சால் முன்னரே கோரப்பட்டிருந்தது.

அதற்கமைவாக அரசாங்க பாடசாலையில் இணைந்து சேவையாற்ற விருப்பத்தைத் தெரிவித்திருந்தவர்களுக்கே இந்த நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதில் நியமனம் பெற்றவர்கள் ஐந்து வருடங்கள், நியமிக்கப்பட்டுள்ள கஷ்ரப் பிரதேச பாடசாலைகளில் கடமைபுரிய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தூர் கிழக்கு மக்களுக்கு வறுமை ஒழிப்புக் கடன்!

யாழ்ப்பாணம்—

இலங்கை வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வறுமை ஒழிப்புக்கான கடன் திட்டத்தின்கீழ் நியாப் நிறுவன அனுசரணையுடன் புத்தூர் கிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இந்தத் திட்டப் பயனாளிகளுக்குக் கடன் வழங்குவார்.

இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இலங்கை வங்கி யாழ். மாவட்டத்தில் நியாப் திட்ட நிறுவனத்துடன் இணைந்து அடையாளப்படுத்தப்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களி னூடாக இந்தத் திட்டத்தின்கீழ் கடன் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# சுகாதார முகாமைத்துவ உதவியாளரை நியமிக்க விண்ணப்பம் கோரல்!

கொழும்பு—

அரச சுகாதார சேவைகள் அலுவலகங்கள் மற்றும் வைத்தியசாலை ஆகியவற்றின் நிர்வாக விடயங்களை சீரமைக்கும் நோக்கத்துடன் சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான விண்ணப்பங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் சுகாதார அமைச்சின் நிர்வாகப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலும், மாவட்ட இனவிகிதாசார அடிப்படையிலும் தகுதியானவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர்.

மொழியறிவு, உளச்சார்பு, கணிதம், பொதுஅறிவு மற்றும் ஆங்கில மொழி ஆகிய 5 பாடங்களைக் கொண்டதாக இந்தப் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பை பூர்த்திசெய்தவர்கள் மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், மொழி, ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

# பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோருவோர் எதிர்கொள்ளும் சிக்கல்!

*(நேற்றைய தொடர்ச்சி ...)*

அவ்வாறு செய்வதற்கு மறுப்பவர்கள் காலவரையற்ற வகையில் தடுப்பு முகாம்களில் அடைத்திருக்க வேண்டிய நிலைமைக்கும் ஆளாகின்றார்கள்.

1993 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தஞ்சம் கோரி தொடர்ந்து நிராகரிக்கப்பட்ட நிலையில் இருப்பவர்கள், தற்போது 13 வருடங்களாகப் பிரித்தானியாவில் வாழ்கிறார்கள். பிரித்தானியா இறங்குதுறையில் தனது நாட்டு கடவுச்சீட்டைக் காட்டத் தவறியவர்கள் பிரித்தானிய குடிவரவு விதிகளின் பிரகாரம் கள்ளகுடியேற்றவாளர் என வகைப் படுத்தப்படுகிறார்கள். அவர்களது தஞ்சக் கோரிக்கை சட்ட அடிப்படையில்தான் கடந்த வருடம் நிராகரிக்கப்பட்ட நிலையில் பத்து வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வந்த சில தமிழர் கட்டாய நாடு கடத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். இன்றைய கால கட்டத்தில் நிராகரிக்கப்பட்ட தஞ்சம் கோரியோர் விவகாரம் ஒரு அரசியல் பிரச்சினையாக விஸ்வரூபமெடுத்துள்ளது. மாறி - மாறி வந்த பிரித்தானிய அரச கட்சிகள் தஞ்சம் கோரியோர் - வெளிநாட்டவர்களின் பிரச்சினையைத் தங்களது தேர்தல் மேடை விவகாரமாக ஆக்கியது. தற்போது இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டோர்கள் நாடு கடத்தப்படுவதற்குரியவர்களாக இருந்தும் ஆளும் தொழிற்கட்சி இவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றத் தவறிவிட்டதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. நிராகரிக்கப்பட்ட தமிழர்கள் பலவந்தமாக நாடு கடத்தப்படுவதற்குரிய ஆகக் கூடிய ஒரு நாட்டைச் சேர்ந்தவர்களெனவும் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

**பல லட்சம் பணத்தை விரயமாக்கிப் பிரித்தானியாவுக்குள் தஞ்சம் கோருவதற்கு முன்பு அவர்கள் எதிர்கொள்ள இருக்கும் அவல நிலையையும் ஏற்கனவே தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டவர்களின் புரையோடிய பிரச்சினைகளையும் புதிதாகத் தஞ்சம் கோருவோர் அறிந்து கொள்வது நன்மையளிக்கும். இது பற்றிய ஆய்வே இது.**

நிராகரிக்கப்பட்ட நிலையில் அவர்களது குடிவரவு தராதரம் அந்த நிலையிலேயே தொடரப்படும். இவர்கள் தற்காலிகமான அனுமதியுடன் தொடர்ந்து வாழ்வதற்கு அனுமதிக்கப்படுபவர்கள் மாத்திரமன்றி எப்போதும் நாடுகடத்தப்படுவதற்கு உரியவர்கள் என்பதே குடிவரவு சட்டம் தொடர்பான நிலைப்பாடாகும். பிரித்தானிய குடிவரவு பகுதியால் அவ்வப்போது அறிமுகப்படுத்தும் விசேட கொள்கைகளால் அல்லது குடிவரவு சட்ட விதிகளுக்கு அப்பாற்பட்ட வகையில் நிரந்தர இருப்பிட அனுமதியொன்றை வழங்கப்பட்டாலன்றியோ கள்ள குடிவரவாளர் என்ற பதம் மாறாது. இந்தச்

அடுத்த தேர்தலுக்கு முன்பு இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டிவிட வேண்டுமென்று ஆளும் தொழிற்கட்சி கங்கணம் கட்டி நிற்கிறது. நீண்டகாலமாக இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் கணிசமானோர் தங்களது தஞ்சக் கோரிக்கையின் பெறுபேறுகள் என்னவாக இருந்தாலும் தங்களின் ஸ்திரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதில் அக்கறையாக இருந்தார்கள். வீடு, வியாபாரம், சொத்துக்கள் என்று சேர்த்துக் கொண்டார்கள். கடந்த வருடம் கொழும்புக்கு திருப்பியனுப்பப்பட்டவர்களில் ஒருவர் பிரித்தானியாவில் பத்து வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வந்தவரென்பதும், அவர் திருமணம் செய்து மனைவியுடன் வாழ்ந்து வந்தவரெனவும் - இரண்டு வீடுகளைச் சொந்தமாக வாங்கி வைத்திருந்தவரென்பதையும் குடிவரவுப் பகுதியினர் நன்கு அறிந்திருந்தும், அவருக்கு எந்தவித அனுதாபத்தையும் காட்டவில்லை. கடந்த சில மாதங்களாகக் குடிவரவுப் பகுதியின் நடவடிக்கைகளை ஆய்வு செய்கின்ற போது - நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் தஞ்சம் கோரியோர்களைத் திருப்பியனுப்புவதில் என்றுமில்லாதவாறு கடும் போக்குகளைக் கொண்டிருக்கிறார்களென்பது தெளிவாகிறது.

இலங்கையில் இன்னும் நிரந்தரமான தீர்வு ஒன்றில்லையென்பது நாடுகடத்தப்படுவதற்கு எதிரான ஒரு காரணியாக இன்றைய நிலையில்லை. பிரித்தானியாவில் நிராகரிக்கப்பட்ட தமிழர்கள் நிச்சயமற்ற எதிர்காலத்துடன் நாடுகடத்தலை எதிர்நோக்கிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டதற்குப் பிரித்தானியாவின் தஞ்சம் கோருவோர் தொடர்பான நடைமுறைகள் காரணம் என்பதைவிட, இங்கு வாழும் ஒட்டு மொத்த தமிழர்களே காரணம் என்பதுதான் எனது ஆய்வின் கசப்பான முடிவாகும். *(முற்றும்)*

**கலாநிதி. கண்ணமுத்து சிதம்பரநாதன் [கே.எஸ்.நாதன்] சட்டவல்லுநர்.**

# மாவிலாறு பிரச்சினையை தீர்க்கும் முன் அரசு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு



கொழும்பு —

மாவிலாறு நீர்ப்பிரச்சினை தொடர்பான தீர்வை எட்டுவதற்கிடையில் அரசாங்கம் பதில் நடவடிக்கையை ஆரம்பித்து விட்டதென கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொபினூர் எமர்ஸன் மேலும் தெரிவித்ததாவது-

இருதரப்பினரும் போர் நிறுத்தத்திலிருந்து விலகிக் கொள்வதாக அறிவிக்கவில்லை. ஆனாலும் அரசாங்கமும், புலிகளும் போர்நிறுத்தத்தை மீறியுள்ளனர்.

இது மிகவும் சிக்கலான ஒரு நிலைமை. போர்நிறுத்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதா? இல்லையா? என்பதையும் தமக்கு சமாதானத்தின் மீது உள்ள பற்றுறுதியையும் இருதரப்பினருமே வெளிப்படுத்த வேண்டுமெனக் கண்காணிப்புக் குழு இந்தத் தருணத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறது.

மாவிலாறு நீர்ப்பிரச்சினை தொடர்பாக புலிகளுடன் கண்காணிப்புக் குழு பேசி ஒரு தீர்வை எட்ட முற்படுவதற்கிடையில், அரசாங்கம் தனது பதில் நடவடிக்கையை ஆரம்பித்து விட்டது.

எமது தலைவர் உல்ப்ஹென்றிக்ஸன் நீர்ப்பிரச்சினையை தீர்ப்பதற்கு புலிகளுடனும், தற்பொழுது தொடரும் தாக்குதல்களை நிறுத்துவதற்கு அரசாங்கத்துடனும் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தியே வருகின்றார். ஆயினும், இருதரப்பும் இதுவரைக்கும் சுமூகமான இணக்கப்பாட்டுக்கு வரவில்லை என அவர் தெரிவித்தார்.

# அரசின் குற்றச்சாட்டை பின்லாந்து நிராகரிப்பு

கொழும்பு —

இலங்கைப் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிலிருந்து விலகியமை தொடர்பாக அரசாங்கம் சுமத்திய குற்றச்சாட்டை பின்லாந்து அரசாங்கம் நிராகரித்துள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலிருந்து பின்லாந்து வெளியேறுவதானது பயங்கரவாதத்துக்கு ஆதரவு தரும் நடவடிக்கை என அரசாங்கம் குற்றம் சுமத்தியிருந்தது. இதற்குப் பதிலளித்துள்ள பின்லாந்து நாட்டின் வெளிவிவகார அமைச் சின் அரசியல் விவகார நிர்வாக உதவியாளர் மரிட்டா மனோலா கண்காணிப்பாளர்களின் வெளியேற்றமானது கருத்துக்களுக்கு உட்பட்டது அல்ல என வலியுறுத்தியுள்ளார்.

பின்லாந்தை பொறுத்த வரையில் நியாயமான கேள்விகளின் அடிப்படையில் தமது முடிவை மேற்கொண்டது. கண்காணிப்பாளர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை அனைத்து தரப்புக்களும் அவசியம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலேயே இந்தமுடிவு எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஆங்கில ஆசிரியர்களுக்கு சேவைக்கால முன்பயிற்சி

யாழ்ப்பாணம் —

வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் நிரந்தர ஆங்கில ஆசிரியர்களுக்கு சேவை முன் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வி.இராசையா தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கி இதற்கான நிதியுதவியை வழங்கியுள்ளது.

நிகொட் திட்டத்தின் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடக்கு- கிழக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 24 கல்வி வலயங்களினதும் தலா 35 ஆங்கில ஆசிரியர்கள் வீதம் 840 ஆசிரியர்களுக்கு சேவை முன்பயிற்சி வழங்கப்படவுள்ளது.




முருகனின் ஒளி வெள்ளம்



முருகனின் பார்வை எல்லாம் எங்கள்
உயிரைக் கழுவும் ஒளி வெள்ளம்!
திங்கள் பூக்கள் வெள்ளியினைத்
தேடிப் போகத் தேவையில்லை!
உன் பாட்டுப் படிப்போரை
ஓடி வந்து கொஞ்சுமையா!
புலி போலும் உங்களை நான்
சேரப் பாட்டே உதவிடுமோ?

மயக்கும் சிற்பம் செய்தாயே



மல்லைக் கல்லின் குகையெல்லாம்
மயக்கும் சிற்பம் செய்தாயே!
முல்லைக் கொடியைக் கொண்டு மலர்
மூடும் பந்தர் மணம் தந்தாயே!
சொல்லைக் கொண்டு சுவை யெட்டும்
சொட்டும் பாக்கள் சொரிந்தேனே!
இல்லை என்னும் உணர்ச்சிகளை
எழுப்பிக் கனவுந் தந்தீரே!

அழியாக் கவிதை வேலன்



முருகன் உதவும் உதவும் கட்டாயம்!
ஓடி வருவேன் உன்னிடமே!
அகிலம் போற்றுமொரு
அழியாக் கவிதை வேலன்!
பிழையென்றால் பொறுத்திடுக
அன்பு மொழிகளில் உன்னை போற்றுவேன்!
மத்தாய் உனது நினைவெல்லாம்
மனசுத் தயிரைக் கடைந்தாயே!

கொடியவர்களை வெட்டு முருகா



சேவ காதீ கொண்டோ யேவா
தீட்டி நன்கு கூர்வாள் ஒன்று!
பாவம் தமிழர்கள் தான்
பாதி பாதியாக கொடியவர்களை
உடனே ஆமாம் வெட்டு! வெட்டி
ஒவ்வோர் பாதி கொடு எதிரிக்கு!
தடையே இல்லை! கொடியவர்களை
வெட்டினால் போதும்! தாரும் வெட்டி.

பொன் போல் உண்மை



ஐயா ஐயா சேர்வேனோ உன்னிடம்
உனது வீடே இப்பொழுது!
கையே சிறகாய் மாறாயோ?
பொய்யோ எல்லாம்? எங்கே
பொன்போல் உண்மை! முருகா என்
செய்வேன்?

5 ஆம் திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

கந்தன் அருள் அனைவர்க்கும் கிடைப்பதாக!
அபிஷேக பொருட்களுக்கு எங்கும்
அலையவேண்டியதில்லை. உடன் புறப்படுங்கள்...

சிவசம்பு களஞ்சியம்

அபிஷேக சாமான் பல்பொருள் வாணிபம்
இல.3 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
[5492]

# சர்வதேச கடலில் தத்தளிக்கும் படையினருக்கு இந்திய அரசாங்கம் ஒருபோதும் உதவக்கூடாது

## பிரதமர் மன்மோகன் சிங்கிடம் வைகோ அவசர வேண்டுகோள்



சென்னை—

தமிழீழ கடற்பரப்பில் நுழைந்து முற்றுகைக்குள்ளாகி தற்போது சர்வதேச கடற்பரப்பில் தத்தளிக்கும் 854 இராணுவத்தினரைக் கொண்ட கப்பலைப் பாதுகாப்பாக மீட்க இந்தியா உதவக்கூடாது என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ வேண்டுகோள் விடுத்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு - வைகோ நேற்று அனுப்பிய கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இலங்கைத்தீவில் போர்மேகங்கள் சூழ்ந்துள்ளன. போர்நிறுத்த ஒப்பந்தத்தை திட்டமிட்டே மீறியுள்ள இலங்கையின் இனவாத சிங்கள அரசு- தமிழர்கள்மீது தனது இனக் கொலைத் தாக்குதலைத் தீவிரப்படுத்த முப்படைகளையும் ஏவியுள்ளது. பெண்கள், குழந்தைகள் உட்பட அப்பாவி தமிழர்கள் குண்டுவீச்சால் கொல்லப்படுகின்றனர்.

தமிழர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவக்கூடாது என்றும், தாக்குதல் நடத்தக்கூடாது என்றும் விடுதலைப்புலிகள் தொடர்ந்து செய்த எச்சரிக்கையைமீறி - இலங்கை அரசு பீரங்கித் தாக்குதலையும், குண்டு வீச்சையும் தொடர்ந்து நடத்துவதால் தமிழர் பகுதிகளையும், தமிழ் மக்களையும் பாதுகாக்க விடுதலைப் புலிகள் பதில் தாக்குதல் நடத்துகின்றனர். தமிழர்கள்மீது அறிவிக்கப்படாத யுத்தத்தை இலங்கை அரசு தொடுத்துவிட்டது.

இந்தச் சூழ்நிலையில் -இலங்கை பொலிஸார் 44பேருக்கு தமிழ் நாடு - கோவையில் மத்திய பாதுகாப்பு பொலிஸார் தளத்தில் இந்தியா பயிற்சி கொடுக்கின்ற செய்தி அதிர்ச்சி ஊட்டுகிறது.

உடனடியாக இந்த பயிற்சி நிறுத்தப்பட்டு சிங்கள பொலிஸாரை இலங்கைக்கு திருப்பி அனுப்ப மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பன்னாட்டு ஊடகங்களின் வாயிலாகக் கிடைத்துள்ள நம்பகரமான தகவல்களின்படி - தமிழர் பகுதிகளில் தாக்குதல் நடத்துவதற்காக 854 ஆயுதம் தாங்கிய துருப்புக்களை ஏற்றிக் கொண்டு இலங்கை கடற்படை கப்பல் ஈடுபடுத்தப்படுகிறது என்ற செய்தியை நான் அறிகிறேன்.

அத்துடன், சம்பந்தப்பட இலங்கை கடற்படை கப்பலுக்கு பாதுகாப்பு கொடுக்கவும், உதவி செய்யவும் இந்திய கடற்படையின் உதவியை நாடி- ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய பிரதமரிடம் பேசியுள்ளதாக செய்தி வெளியாகியிருக்கிறது.

அப்படி ஏதாவது உதவியை இந்தியா இலங்கைக்குச் செய்ய முற்பட்டால் அது மன்னிக்கமுடியாத அக்கிரமமான செயலாகும். தமிழர்களுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு துணைபோகும் காரியமாகவே முடியும்.

எனவே, தமிழர்களுக்கு எதிராக அப்படிப்பட்ட கொடிய தவறை இந்திய அரசு செய்ய முற்படாது என நம்புகிறேன்.

இந்தியர்களுக்கு எதிராகவும், தமிழர்களுக்கு எதிராகவுமுள்ள சிங்கள இனவாதக் குழுக்களால் ஆட்டுவிக்கப்படும் இலங்கை அரசுக்கு எந்த விதமான உதவியையும் இந்தியா செய்யக்கூடாது என்பதை வேதனையோடு வலியுறுத்துகிறேன் என்று வைகோ அந்தக் கடிதத்தில் தெரிவித்தார்.

# இலங்கை இராணுவத்துக்கு உதவினால் தமிழ்நாட்டில் கடும் விளைவுகள் ஏற்படும்

## பழ.நெடுமாறன் இந்திய அரசுக்கு எச்சரிக்கை

சென்னை—

ஈழத் தமிழர்களை மனிதாபிமானமில்லாமல் கொன்று குவிக்கும் சிங்கள இராணுவத்துக்கு உதவுகின்ற இழிசெயலை இந்தியா செய்தால் - தமிழ்நாட்டில் கடும் விளைவுகள் ஏற்படும் என்று தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் எச்சரித்துள்ளார்.

அவுஸ்திரேலிய இன்பத் தமிழ் வானொலிக்கு நேற்று அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

திருகோணமலையில் வாழையடி வாழையாக வாழ்ந்து வந்த தமிழர்களைக் கொன்று குவித்தது மட்டுமல்லாமல்-சில மாதங்களாக தொடர்ந்து இனவெறிப் படுகொலைகளை திருகோணமலை ப் பகுதியில் செய்த சிங்கள இராணுவத்தினர்- இன்றைக்கு விடுதலைப் புலிகளை எதிர்கொள்ளமுடியாமல் தப்பி ஓடுவதற்கு, உயிர் பிழைப்பதற்கு இந்தியாவின் உதவியை நாடுகிறார்கள். என்ற செய்தி அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

திருகோணமலைப் பகுதியிலும், பிற பகுதிகளிலும் சிங்கள இராணுவத்தினர் நடத்திய இனவெறியாட்டத்தைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளும் வேண்டுகோள் விடுத்தன. ஆர்ப்பாட்டங்களை நடத்தினோம். போராட்டங்களை நடத்தினோம். இவையெல்லாம் செய்தும் கூட இந்திய அரசு அந்த நேரத்தில் அந்தப் பிரச்சினையில் கொஞ்சமும் தலையிடாமல் வேடிக்கை பார்த்தது.

இப்போது சிங்கள இராணுவம் ஒரு ஆபத்தில் சிக்கிக்கொண்டது- என்பதை அறிந்த உடன் அதற்கு உதவ வேண்டும் என்று சிங்கள அரசு கேட்கிறது. அப்படிக் கேட்பதற்கு அவர்களுக்கு எந்த தார்மீக உரிமையும் கிடையாது.

இதே சிங்கள அரசு சில நாட்களுக்கு முன்னால் இதே திருகோணமலையில் இந்திய எண்ணெய் நிறுவனத்துக்குச் சொந்தமாக இருந்த எண்ணெய்க் குதங்களிலிருந்து இந்திய எண்ணெய் நிறுவனத்தை வெளியேற்றி தன்வசப்படுத்திக் கொண்டது என்பது மறந்துவிட முடியாது.

இந்தியாவுக்கு எதிராக இந்த செயல் புரிந்த சிங்கள அரசு - அதே இந்தியாவிடம் உதவி கேட்கும்போது இந்திய அரசு உதவி செய்யக்கூடாது. அது உள்நாட்டுப் பிரச்சினை. அதில் நாங்கள் தலையிட விரும்பவில்லை என்று இந்திய அரசு ஒதுங்கியிருக்க வேண்டுமே தவிர அதிலே தலையிட்டு சிங்கள இராணுவத்துக்கு உதவி செய்வது என்பது இந்திய அரசு ஒரு சார்பாக நடந்துகொள்கிறது என்ற எண்ணத்தை இந்தியாவிலுள்ள தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல உலகம் முழுமைக்கும் உள்ள தமிழர்களிடம் ஏற்படுத்திவிடும்.

அது நல்லதல்ல. எனவே அந்த மாதிரி ஒரு செயலை இந்திய அரசு செய்யாது என்று நாங்கள் நம்புகிறோம். அதைமீறி இந்திய அரசு செய்யுமானால் அதற்குத் தமிழ்நாட்டில் கடும் எதிர்விளைவுகள் ஏற்படும்.

இது தொடர்பாக இந்திய அரசுக்கான கோரிக்கை அறிக்கையை அனுப்ப ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவிலுள்ள 80 இற்கும் மேற்பட்ட அமைப்புகளும், நமது நண்பர் திருமாவளவனின் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம், வைகோவின் ம.தி.மு.க, டொக்



டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி போன்ற ஈழத் தமிழர் பிரச்சினையில் உண்மையான நாட்டம் கொண்டிருக்கிற - அத்துணை இயக்கங்கள் மூலமாக, இந்திய அரசின் மூலமாக இந்தக் கோரிக்கையை வலியுறுத்த திட்டமிட்டிருக்கிறோம். அதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

சிங்கள இராணுவத்துக்கு உதவக்கூடாது என்பதற்காக ஏற்கனவே பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டுள்ளன. மனிதாபிமான உதவி என்பது சிங்கள இராணுவத்தைப் பொறுத்த வரையில் அர்த்தமற்ற ஒரு சொல்லாகும்.

ஏனென்றால் சிங்கள இராணுவம் மனித நேயத்துக்கு எதிராக திட்டமிட்ட ஒரு இனப்படுகொலையில் ஈடுபட்டுவருகிறது. அதற்கு உதவி செய்வது மனிதாபிமான உதவியாகாது. அதற்கு மாறாக அவர்களின் இனப் படுகொலைக்கு துணை போகின்ற உதவியாகும்.

ஆகவே அத்தகைய இழி செயலை இந்தியா ஒருபோதும் செய்யாது என்று நம்புகிறோம் எனத் தெரிவித்தார்.

# அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு முன் ஈழத் தமிழரின் அமைதிப் பேரணி!

வொஷிங்ரன்—

அமெரிக்க காங்கிரஸ் சபை முன்பாக அங்கு வாழும் ஈழத்தமிழர் கடந்த திங்கட்கிழமை அமைதிப் பேரணியில் ஈடுபட்டனர்.

நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேரணி நான்கு மணித்தியாலங்கள் வரை நீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அரசும், துணை இராணுவக் குழுக்களும் தமிழ்மக்கள்மீது தொடர்ந்து மேற்கொண்டுவருகின்ற அரச பயங்கரவாத வன்முறைகளையும், படுகொலைகளையும் சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படுத்து முகமாகவும், ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகளை வலியுறுத்தி இந்த அமை திப் பேரணி நடத்தப்பட்டது.

இந்த அமைதிப்பேரணியில் நூற்றுக்கணக்கான ஈழத் தமிழர்களும், தமிழகத் தமிழர்களும் பங்கேற்றனர்.

அரசின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு எதிரான முழக்கங்களையும், அரசால் திட்டமிட்ட வகையில் மக்கள் மீது திணிக்கப்படும் போரை நிறுத்த வேண்டியும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஆதரவு தெரிவித்து, ஜனநாயகத்தின் உயர் விழுமியங்களையும், மரபுகளையும் அமெரிக்கா அங்கீகரிக்கவேண்டு மென்றும் அமெரிக்க வாழ் தமிழர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப்போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரியும், தமிழ் மக்கள் மீதான அரச பயங்கரவாதத்தைத் தடுத்துநிறுத்தக் கோரியும், அரச பயங்கரவாதங்களை விபரித்தும் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களின் செயலாளர்களிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

வங்காலை படுகொலைச் சம்பவத்தை நாடக வடிவில் செய்து காண்பித்தபோது அமெரிக்க காங்கிரஸ் சபையில் பணியாற்றும் நூற்றுக் கணக்கான அமெரிக்க மக்களும், உல்லாசப் பயணிகளும் நின்று பார்த்தது, படங்கள் எடுத்தது மட்டுமன்றி அரச பயங்கரவாதம் பற்றி விசாரித்தனர்.

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும், தமிழ் மக்கள் மீது சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களை விபரித்தும் 4000 இற்கும் மேற்பட்ட பிரசுரங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டன.

அமெரிக்க காங்கிரஸ் சபை முன்பாக- தமிழ் உறவுகளுக்காக குரல் கொடுக்க, அமெரிக்கத் தமிழர்களுக்கு கிடைத்திருந்த இந்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி அநியாயத்துக்கும், அக்கிரமத்துக்கும் எதிராக குரல்கொடுத்தது மட்டுமன்றி -

காலத்தின் கடமையை நிறைவேற்றிய உணர்வை பேரணி யில் பங்குபற்றியவர்கள் மத்தியில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நிகழ்வின் இறுதியாக அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு முன்பாக சுலோகங்களைத் தாங்கியவாறும், உணர்வு பூர்வமான முறையில் கோஷங்களை எழுப்பியவாறும் அமைதியான முறையில் பேரணியாக வந்து இறுதியாக பேரணியில் பங்குபற்றியவர்கள் மத்தியில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

அமெரிக்க, தமிழக அமைப்புக்களைச் சேர்ந்த சேரன், செல்லையா, முத்துவேல், கனடாவில் இருந்து வருகைதந்திருந்த வண.பிதா சேவியர் அடிகளார், அமெரிக்க உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர் கருணாகரன் ஆகியோருடன் விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரும் சிறப்புரை ஆற்றினர்.










அமெரிக்காவின் வொஷிங்ரன் நகரில் காங்கிரஸ் சபைக்கு முன்பாக கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களின் ஒரு பகுதியினரையும் - நிகழ்வில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகரையும் படங்களில் காணலாம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முகாம்களுக்குள் படையினரை புலிகள் முடக்கி வைத்துள்ளனர்!

## நேரில் பார்த்தவர் பேட்டி

மூதூர் —

மூதூர்நகருக்குள் பிரவேசித்த விடுதலைப்புலிகள் இராணுவத்தினரின் செயற்பாடுகளை சில பிரதேசங்களுக்குள் முடக்கி வைத்திருப்பதாக மூதூரைச் சேர்ந்த அப்துல் ரவூப் என்பவர் பி.பி.சி தமிழோசைக்கு தெரிவித்தார்.

நகரின் நான்கு பகுதிகளிலுமுள்ள இராணுவ முகாம்களுக்குள் படையினர் முடங்கியிருக்கின்றனர். விடுதலைப்புலிகள் அந்த முகாம்களை முற்றுகையிட்டிருக்கின்றனர். முகாம்களுக்கு அருகிலும், நகரின் ஏனைய இடங்களிலும் விடுதலைப்புலிகளின் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் அச்சமடைந்தமக்கள் பள்ளிவாசல், கோவில், மாணவர் விடுதிகள் போன்றவற்றில் தங்கியுள்ளனர்.

இந்தப்பகுதியில் தொடர்ச்சியாக விமானப்படை, கடற்படையினரின் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மூதூர் இறங்குதுறைமுகத்தை படையினரும், விடுதலைப்புலிகளும் கைப்பற்றி வைத்திருப்பதால் கடற்படையினர் கொண்டுவந்த படையினரை இறக்கமுடியாத நிலையில் கடற்படையினர் இருக்கின்றனர்.

பொதுமக்களின் குடியிருப்புகள் மத்தியிலும் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுக்கொண்டிருக்கிறது.

நகரைச்சுற்றி 700 க்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் இருப்பதால் படையினரோ, பொலிஸாரே வெளியேற முடியாதநிலையில் இருக்கின்றனர்.

நகருக்குள் தொடர்ந்தும் ஷெல் தாக்குதல் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகளும் படையினரும் மாறி மாறி தாக்குதல் நடத்துவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் முடிவுறுவதற்கான சாத்தியம் குறைவாகவே காணப்படுகிறது. படையினரை - விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்திருப்பதால் படையினர் வெளியேறவோ, உட்செல்லவோ முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர். இதேவேளை, கடற்படையினர் தரையிறக்கும் முயற்சியை பல தடவை மேற்கொண்ட போதும் அது வெற்றியளிக்கவில்லை. இந்த மோதலின் போது பொதுமக்கள் பலர் உயிரிழந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மன்னார் தாக்குதல்களில் கொன்ஸ்டபிள், சிப்பாய் பலி!

மன்னார்

மன்னாரில் பொலிஸார் மற்றும் படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் படைச்சிப்பாய் ஒருவரும், பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவரும் உயிரிழந்தனர். மேலும் இருவர் காயமடைந்தனர்.

உயிலங்குளம் - பறைய அடம்பன் வீதியில் நேற்று காலை 8.30 மணியளவில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் காயமடைந்தார்.

இந்தக் கிளைமோர்த் தாக்குதலில் மாத்தளையைச் சேர்ந்த மிகெதர புஸ்பகுமார ஆரிய சேன (வயது 23) என்ற சிப்பாயே உயிரிழந்தவராவார். இவருடன் சென்ற தம்மிக்க (வயது 29) என்பவர் படுகாயமடைந்து மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, நேற்று முற்பகல் 11.30 மணியளவில் முருங்கன் - செம்மண் வீதியில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் காயமடைந்தார்.

செக்டர் 10 ஐச் சேர்ந்த எஸ்.குணதிலக்க என்பவரே காயமடைந்து அனுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இதேவேளை, பேசாலை நகரப் பகுதியில் நேற்று பிற்பகல் 4 மணியளவில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பேசாலை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் மினுவாங்கொடையைச் சேர்ந்த சுமணபுலிகே மகிந்த (வயது 41) என்ற கொன்ஸ்டபிளே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

பொலிஸ் கொன்ஸ்டபிள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து, நகரில் இருந்த வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன், நகரப்பகுதி மக்கள் பேசாலை வெற்றிநாயகி தேவாலயத்தில் தஞ்சமடைந்தனர். (மோ)

## புல்மோட்டை...

கடற்படையினர் வழிமறித்துத் தாக்கியதாக படைத்தரப்பு தெரிவித்தது.

தெற்குப்பகுதியிலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணித்த 18 முதல் 20 வரையான கடற்புலிகளின் படகுகள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்.

வான்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் 5 படகுகள் மூழ்கடிக்கப்பட்டதுடன் மேலும் 4 படகுகள் சேதமாக்கப்பட்டதாகவும் படைத்தரப்பு தெரிவித்தது.

## புலிகளின்...

நேற்றுக் காலை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் நுழைந்த கிபிர் விமானங்கள் மக்களின் குடியிருப்புக்கள், மற்றும் அரச திணைக்களங்கள் மீது குண்டுத்தாக்குதல்களை நடத்தின. இதனால் கட்டிடங்கள், வீடுகள் பலத்த சேதமடைந்தன.

விமானத்ததாக்குதல், மற்றும் பல்குழல் எறிகணைத் தாக்குதல்களால் அச்சமடைந்த மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். குண்டுகள், எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததால் அந்தப்பகுதிகளில் பாரிய குழிகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நண்பகலுக்குப் பின்னர் ஓய்ந்திருந்த விமானம் மற்றும் ஷெல், பல்குழல் பீரங்கித் தாக்குதல்கள் - பிற்பகல் 4 மணிக்குப் பின்னர் தீவிரமடைந்ததாகவும், இதனால் திருகோண மலை நகரப்பகுதி அதிர்ந்து கொண்டிருப்பதாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, திருகோணமலைக்கு வடக்காக வெலிஓயாவிலுள்ள 224 ஆவது பிரிகேட் இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் என அச்சமடைந்த படைத்தரப்பினர் - நேற்றிரவு 8.45 மணியிலிருந்து இராணுவ முகாமை சூழவுள்ள விடுதலைப்புலிகளின் நிலைகள்மீது தாக்குதல் நடத்துவதாகப் பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஆயிரக்கணக்கான...

மூதூர் பிரதேசத்துக்குள் நேற்று அதிகாலை ஊடுருவிய நூற்றுக் கணக்கான புலிகள் அங்கு முக்கிய இடங்களை கைப்பற்றி நிலைகொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது. புலிகளின் தாக்குதலுக்கு படையினர் தமது முகாம்களை விட்டு வெளியேறி பல்வேறு இடங்களிலும் பாதுகாப்பு தேடியுள்ளனர். இவர்கள் மூதூரை விட்டு வெளியேறாதபடி புலிகள் பாதைகளை மூடியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக ஆயிரக்கணக்கான இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார் மூதூர் நகரப் பகுதியில் முற்றுகைக்குள்ளாகியிருப்பதாகவும் - இவர்களை மீட்க படைத்தரப்பு பெரும் முயற்சிகளை எடுத்து வரு வதாகவும் தெரியவருகிறது.

கடல்வழியாக படையினரை தரையிறக்க எடுத்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை.

நேற்றிரவு 7.30மணிக்கு பின்னர் படையினரை தரையிறக்கும் முயற்சியில் கடற்படையின் டோறாப் படகுகளும், நீரூந்து விசைப் படகுகளும் ஈடுபட்டன. எனினும் இது முறியடிக்கப்பட்டதாகவும், இதன் பின்னர் வெவ்வேறு இடங்களிலும் தரை இறக்க எடுத்த முயற்சி தோல்வியடைந்ததையடுத்து - தரை இறக்க முயற்சியை கைவிடப்பட்டதாகவும் - அதன்பின்னர் பல்குழல் எறிகணைத் தாக்குதல்கள் தீவிரமாக இடம்பெற்று வருவதாகவும் நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (4)

## தற்காப்பு...

பொதுமக்களைக் காப்பாற்றும் மனிதாபிமான நோக்கத்துடன் படையினர் மீது தாக்குதலை போராளிகள் தொடுத்துள்ளனர்.

மாவிலாறு நோக்கிய படையினரின் தாக்குதலுக்கு திருமலை துறைமுக கடற்படை தலைமையகத்திலிருந்து பின்தள ஆட்லறி சூட்டுவலு வழங்கப்பட்டுள்ளது. இதனாலேயே கடற்படை தலைமையகம் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது.

படையினரின் படையெடுப்புக்கான வழங்கல் பாதையையும், செயற்பாடுகளையும் சீர்குலைக்கும் நோக்குடன் திருமலை துறைமுகம் மற்றும் புல்மோட்டை கடற்பரப்பில் கடற்படை கலங்கள் மீது கடற்புலிகள் தாக்குதலை தொடுத்தனர்.

ஏ15 நெடுஞ்சாலையிலுள்ள படை முகாம்கள் மீது போராளிகள் நடத்தி வரும் தாக்குதல்கள், தற்காப்பு மற்றும் மனிதாபிமான நோக்கம் கொண்டவை என அவர் மேலும் தெரிவித்தார்.

## 854...

இந்தக்கப்பல் கரைக்குச் செல்லமுடியாமல் கடற்பரப்பில் தத்தளித்தது.

இந்நிலையில் காங்கேசன் துறை முகத்துக்கு தப்பிச் செல்வதற்காக இந்திய உதவியைக் கோரி சர்வதேச கடற்பரப்பில் அந்தக் கப்பல் தரித்து நிற்பதாக இணையத் தளச்செய்திகள் தெரிவித்தன.

## நாவலர் வீதியில் இளைஞர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம் —

யாழ்.நாவலர் வீதியில் நமது ஈழநாடு அலுவலகம் முன்பாக இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் 1.40 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் - யாழ்.மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த பத்மநாதன் பீஷ்மானந்தன் (வயது 29) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். உயிரிழந்தவர் ஜங்கரன் இசைக்குழுவின் உரிமையாளராவார்.

நேற்று பாடசாலைக்குச் சென்ற சகோதரியின் பிள்ளைகளை ஏற்றி வருவதற்காக சென்று கொண்டிருந்த வேளை இவரைப் பின்தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர்கள் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் மரண விசாரணைகளை மேற்கொண்டதுடன் - சடலத்தை பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

## ஓட்டோ சாரதி சுட்டுக்கொலை

திருகோணமலை —

திருகோணமலை நகரில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஓட்டோச் சாரதி ஒருவர் நேற்றிரவு இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரவீந்திர ஜித் (வயது 32) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இருவர் - இவரை அழைத்து வீட்டுக்கு முன்பாக சுட்விட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.(4)

## உப்புவெளியில் இளைஞர் சுட்டுக்கொலை

திருகோணமலை —

திருகோணமலை - உப்புவெளிப் பகுதியில் நேற்று முன்தினமிரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அபேயபுரத்தைச் சேர்ந்த நந்தன் கீதாஞ்சன (வயது 28) என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

## சிப்பாய் காயம்

வவுனியா —

வவுனியா - கொந்தக்காரன் குளத்தில் மிதிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. இதேவேளை, வவுனியா - நெலுக்குளத்தில் நேற்றுக்காலை 6.30 மணியளவில் கைவிடப்பட்ட பொலிஸ் காவலரண் ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது.

## மூதூரில் உள்ள...

படையினர் மக்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் தாக்குதலை மேற்கொள்வதாகவும் விடுதலைப் புலிகள்மீது தாக்குதல் மேற்கொண்டால் - பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதற்காக படையினர் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதல்களையே மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மூதூர் நகரிலுள்ள இராணுவ முகாம்களை புலிகள் அண்மித்திருப்பதாக அத்துல ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நேற்றுக்காலை விடுதலைப் புலிகளுக்கும், அரச படையினருக்குமிடையில் மூதூரின் பல இடங்களிலும் மோதல் இடம்பெற்றது. கட்டைபறிச்சான், செல்வநகர், மகிந்தபுரம், தோப்பூர் ஆகிய பிரதேசங்களிலுள்ள படையினரின் முகாம்களை அண்மித்த பகுதியிலேயே விடுதலைப் புலிகள் நிலை கொண்டுள்ளனர். இந்த இடங்களில் மோதல் தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் மூதூரில் உள்ள படையினரின் முகாம்களை அண்மித்தார்களே தவிர, எந்தப் பிரதேசத்தையும் கைப்பற்றவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே, மூதூர் இறங்கு துறைமீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டபோதும் - அது கடற்படையினரின் கட்டுப்பாட்டிலேயே தொடர்ந்தும் இருப்பதாக கடற்படைப் பேச்சாளர் தசநாயக்க தெரிவித்தார்.

மகிந்தபுரம் இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்த்தலில் காயமடைந்த 4 படையினரில் ஒருவர் உயிரிழந்தார். தோப்பூர் மற்றும் சோமபுரம் பொலிஸ் காவலரண்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

நேற்று இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்தவர்கள் விமானம் மூலம் கொழும்புக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

மூதூர் வைத்தியசாலை மீதான தாக்குதலின்போது காயமடைந்தவர்கள் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## மூதூர் பகுதி...

தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆனால், அரசாங்கம் தமது தரப்பில் மிகக்குறைந்த இழப்பே ஏற்பட்டிருப்பது போல காட்டிக்கொள்கிறது.

மூதூர் பகுதியிலிருந்து இராணுவத்தினரின் அம்புலன்ஸ் காயமடைந்த படையினரை ஏற்றியபடி வயல் வெளிகளூடாக பயணிப்பதை அவதானித்ததாக ரொய்ட்டர் செய்தியாளர் ஒருவர் தெரிவித்தார்.

அதேவேளை, காயமடைந்த படையினர் - கந்தளாய், சேருநுவர, திருகோணமலை உள்ளிட்ட பல்வேறு வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்பட்டிருக்கின்ற அதேவேளை - தொடர்ந்து கொழும்புக்கும் கொண்டு செல்லப்படுகின்றனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இருபதுக்கும் அதிகமான காயமடைந்த படையினர் கொண்டுவரப்பட்டதாக பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்க நேற்று பிற்பகல் தெரிவித்தார்.

நேற்றுமாலை பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில்-9 படையினர் கொல்லப்பட்டதாகவும், 30பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தேசிய பாதுகாப்பு ஊடகநிலையம் வெளியிட்ட அறிக்கையில் - 2 இராணுவத்தினரும், 6 கடற்படையினரும் பலியானதாகவும்- 14 இராணுவத்தினரும், 6 கடற் படையினரும், 2 விமானப்படையின ரும், 2 பொலிஸாரும் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மூதூர் நகரின் பெரும்...

கட்டைபறிச்சான் இராணுவ முகாமைத் தாக்கியழித்த பின்னர் - மூதூர் நகரப் பகுதி, மூதூர் இறங்குதுறைப் பகுதிக்குள் பிரவேசித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

காந்தி நகர், பாலத்தோப்பு, செல்வ நகர், பச்சநூர், சேருவில போன்ற பகுதிகளிலுள்ள இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் மீதும் புலிகள் அதிகாலைவேளை கடும் தாக்குதலை நடத்தியதுடன்- பல பகுதிகளையும் கைப்பற்றி நிலை கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளில் புலிகள் நடமாடுவதையும் - படையினர் அங்கிருந்து வெளியேறி வருவதையும் அந்தப் பகுதி மக்கள் பலர் உறுதிப்படுத்தினர்.

மூதூர்-கொட்டியாரக்கல் பகுதியில் படையினரும், பொலிஸாரும் நிலை கொண்டிருப்பதாகவும் - மூதூர் பொலிஸ் நிலையத்திலிருக்கும் பொலிஸாரை சரணடையுமாறு புலிகள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மூதூரில் குறிப்பிட்ட சில இடங்களிலேயே படையினர் நிலை கொண்டுள்ளனர். இவர்கள் பின்வாங்குவதற்கு வழியின்றியிருப்பதாகக் கூறப்படுகிறது.

நகரின் பெரும்பகுதிகளிலும், முக்கிய இடங்களிலும் புலிகள் நிலை கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அதேவேளை, மூதூர் இறங்கு துறையை புலிகள் கைப்பற்றியதாகக் கூறப்பட்டபோதும் - அதை உறுதிப்படுத்த முடியவில்லை. மூதூருக்கான கடல்வழிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்ட அதேவேளை - தரை வழிப் பாதைகளான அல்லை - கந்தளாய் வீதியும், அலிஓலுவ சந்தி - மூதூர் வீதியும் மூடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மோதல்களில் படையினருக்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. எனினும் புலிகள் தரப்பில் 40பேர் பலியானதாக படைத்தரப்பு கூறியுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப்புலிகள் தரப்பு - இந்தச் செய்தி அச்சுக்கு போகும் வரை உத்தியோகபூர்வ அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.08.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.